# வசந்தம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்

முதற்பெண் துணைவேந்தர்

பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அவர்களின்

## கௌரவிப்புவிழாச் சிறப்புமலர்

H. ead [illegible]

# வசந்தம்

# VASANTHAM

DEPT. OF COMMUNITY MEDICINE
FACULTY OF MEDICINE
21 JUN 2011
Seen by:
Referred to:
File No:
University of Jaffna

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்
முதற்பெண் துணைவேந்தர்
பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அவர்களின்
கௌரவிப்புவிழாச் சிறப்புமலர்**

A Special Number in Honour of
Prof. Vasanthy Arasaratnam,
The First Woman Vice Chancellor,
University of Jaffna

வெளியீடு:
விழாக்குழு, தென்மராட்சி.

Published By:
Organizing Committee,
Thenmaradchy.

கர வருடம் வைகாசித் திங்கள் 29 ஆம் நாள்
12-06-2011

நூலின் பெயர் : வசந்தம்
(யாழ். பல்கலைக்கழக முதற்பெண் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அவர்களின் கௌரவிப்புவிழாச் சிறப்புமலர்)

பதிப்பாசிரியர் : ச. லலீசன் (சரசாலை தெற்கு, சாவகச்சேரி)

வெளியீடு : கௌரவிப்பு விழாக்குழு, மே/பா, சாவகச்சேரி இந்துக் கல்லூரி

பக்கங்கள்: 44

நூலின் அளவு: B5 எழுத்துரு: 12

பிரதிகள் : 1000

அச்சமைப்பு : திருக்கணித பதிப்பகம், டச்சு வீதி, சாவகச்சேரி 021 227 0257

பதிப்பு : 12-06-2011 (இலவச வெளியீடு)

## மலரின் உள்ளே . . .


விழாக்குழு விபரம் 4

**ஆசிச்செய்திகள்**

1. சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் 5
2. வணபிதா ஏ. கே. செல்வநாயகம் 6
3. மௌலவி ஏ. ஆர். நிலாப்தீன் 7

**வாழ்த்துச்செய்திகள்**

1. பேராசிரியர் க. கந்தசாமி 8
2. டாக்டர் த. குகதாசன் 9
3. திருமிகு மாணிக்கவாசகர் கணேசராசா 10
4. திருமதி அ. சாந்தசீலன் 11
5. திருமிகு கு. பிரேமகாந்தன் 12
6. திருமிகு எஸ். கே. யோகநாதன் 13
7. திருமதி புஷ்பா கணேசலிங்கம் 14
8. திருமிகு. அ. கயிலாயபிள்ளை 15
9. திருமிகு க. அருந்தவபாலன் 16
10. திருமதி சிவத்திரை சிவநாதன் 17
11. திருமிகு வ. ஸ்ரீபிரகாஸ் 18
12. திருமதி லோ. நவரத்தினம் 19

**வாழ்த்துப்பாக்கள்**

1. விழாக்குழு (பாவாக்கம் ச. மார்க்கண்டு) 20
2. ம. கங்காதரம் 21

**கட்டுரைகள்**

1. மண் மாண்புற வந்த மாதவச் செல்வி
   - ச. லலீசன் 22
2. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்
   - பேராசிரியர் தி. வேல்நம்பி 29
3. மன் உயிர்க்கெல்லாம் இனிது
   - கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் 36

**நேர்காணல்கள்**

1. தினகரன் வாரமஞ்சரி 39
2. Sunday Observer 42

## விழாக்குழு:

| | |
|---|---|
| தலைவர்: | திரு. அ. கயிலாயபிள்ளை, அதிபர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி. |
| செயலாளர்: | திரு. கா. சிவஞானசுந்தரம், திருக்கணித பதிப்பக முகாமையாளர். |
| பொருளாளர்: | திரு. க. சுதாகரன், அன்னை ரெக்ஸ் உரிமையாளர். |
| பதிப்பாசிரியர்: | திரு. ச. லலீசன், விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை. |

### செயற்குழு:

டாக்டர் அ. குகதாசன்
மருத்துவ அத்தியட்சகர், ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி.

திரு. யோ. ஜெயக்குமார்
உதவிப் பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்.

திரு. கு. சிவானந்தம்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி.

திரு. செ. செந்தூரன்
கணக்காளர், வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி

திரு. க. அருந்தவபாலன்
அதிபர், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி

திருமதி சிவத்திரை சிவநாதன்
அதிபர், சாவகச்சேரி மகளிர் கல்லூரி

டாக்டர் சு. சி. அருளானந்தம்
ஓய்வுபெற்ற வைத்தியர்

திரு. ந. பாலச்சந்திரன்
பிரதி அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

திரு. அ. வாசுதேவா
ஆசிரியர்

திருமதி ம. இராசநாயகம்

### ஏற்பாட்டுக்குழு:

திரு. இ. கயிலைநாதன்
இளைப்பாறிய அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

திருமதி இ. ஜீவேந்திரா
ஆசிரியை, சாவகச்சேரி மகளிர் கல்லூரி

திருமதி ல. முகுந்தன்
அதிபர், கைதடி விக்கினேஸ்வர மகா வித்தியாலயம்.

திருமதி சி. இரகுநாதன்
உதவித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலகம், தென்மராட்சி.

திரு. க. சின்னத்துரை
உதவிக்கல்விப் பணிப்பாளர் (தமிழ்), தென்மராட்சிக் கல்வி வலயம்.

திரு. சி. கமலரூபன்
முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், தென்மராட்சி

திரு. கு. சதாசிவமூர்த்தி
இளைப்பாறிய அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை.

திரு. க. மோகனராஜலிங்கம்
பிறப்பு இறப்பு பதிவாளர், தென்மராட்சி.

திரு. ஆ. தங்கவேலு
அதிபர், கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை.

திரு. க. நடேஸ்வரன்
ஆசிரியர், மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயம்.

திரு. வை. இராசரத்தினம்
இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர்.

# எங்கள் வசந்தம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்
பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்
அவர்கள்

கலாபூஷணம் வேதாகம சோதிட பூஷணம்

## சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் அவர்கள் வழங்கிய

# ஆசிச்செய்தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக தென்மராட்சியைச் சேர்ந்த ஒருவர் தெரிவு செய்யப்பட்டமையை சாவகச்சேரி மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறார்கள். சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட மருத்துவபீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் அவர்களுக்கு சாவகச்சேரியில் கௌரவிப்பு விழா எடுப்பது சாலவும் பொருத்தமானதே. மேலும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு முதல்பெண் துணை வேந்தராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சியளிக்கிறது.

பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே.

என்றவாறு சொந்த இடத்தில் தொழில் செய்வது மிகுந்த திருப்தியைக் கொடுப்பதாகும்.

தென்மராட்சிப் பிரஜையும், சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவியுமாகிய அம்மையார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவபீட சிரேஷ்ட பேராசிரியராகப் பதவி வகிப்பது தமிழ் மக்களுக்கு விசேடமாக தாய்க்குலத்தோருக்கு பெருமையளிப்பதாகும்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலையினால் வடபகுதியில் கல்விச் சமூகம் பெற்றிருக்கும் பின்னடைவை முன்னேற்ற அம்மையார் துணைவேந்தர் பதவி உறுதுணையாக இருக்குமென நம்புகிறோம். அன்னாரின் பதவிக் காலத்தில் எதிர்காலச்சந்ததி கல்வி முன்னேற்றமடைய அரிய வாய்ப்பாகும்.

எல்லையில்லாக் கல்விச் சாதனையாளராகிய செல்வி அவர்களின் வழி நடத்தலில் யாழ். பல்கலைக்கழகமானது சகலதுறைகளையும் செயற்படுத்தி பூரணத்துவமடைந்து மேலும் பிரகாசிக்கும் என்பதில் ஐயமில்லை. இவ்வகையில் பேராசிரியர் அவர்களுடைய செயற்பாடுகள் யாவும் வெற்றியடைந்து யாழ். பல்கலைக் கழகமும், தமிழ் மக்களும் எமது நாடும் வீறு நடைபோட எல்லாம் வல்ல இறையருளைப் பிரார்த்தித்து, நல்லாசியைத் தெரிவித்து அமைகின்றேன்.

வாழ்க பல்கலைக்கழகம்.

நன்றி.

யாழ். தென்னிந்திய திருச்சபை, சாவகச்சேரி

## வணபிதா A. K. செல்வநாயகம் அவர்கள் வழங்கிய

## ஆசிச்செய்தி

தென்மராட்சி மண்ணில் உதித்து கல்வியென்னும் சக்கரத்தில் மேதையாக மேலோங்கி நிற்கும் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் என்னும் கல்வித்தாயை வாழ்த்தி ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றில் ஓர் பெரும் திருப்பமாக புதிய மைற்கல்லாக எல்லோராலும் போற்றப்படும் விதத்தில் தென்மராட்சி மண்ணில் உதித்த கல்வித்தாய் முதல் பெண் துணைவேந்தராகப் பதவியேற்றிருப்பது தென்மராட்சி அனைத்து மக்களுக்கும் பெருமைதரும் குதுாகல விடயமாகும். தென்மராட்சி இறைகுல மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து நன்றியுணர்வுடன் கௌரவிப்பு விழா காணும் பெருந்தகை, கல்வித்தாயை வாழ்த்தி ஆசிச்செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**தாயே உங்கள் சேவைக்காலம் பொற்காலமாய் அமையட்டும்**
**இறைவனில் இனிய பிரசன்னம் உங்கள் முன்பாகச் செல்லட்டும்.**

சாவகச்சேரி முகையத்தீன் ஜும்மா பள்ளி பிரதம மதகுரு

# மௌலவி A.R. நிலாப்தீன் அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி

யாழ். மண்ணின் வசந்தமாய் மங்கா ஒளிச்சுடராகி யாழ் மண்ணின் கல்வியின் பெருமையை மென்மேலும் உறுதிப்படுத்தும் வரலாறு காணாத ஓர் வரலாற்றுப் பெருமையை உருவாக்கிய யாழ் பல்கலைக்கழகத்தின் முதற்பெண் துணைவேந்தரான பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அவர்கள் இறைவனின் அருளைப்பெற்று சகல பாக்கியங்களுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.□

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடப் பீடாதிபதி

## பேராசிரியர் க. கந்தசாமி அவர்கள் வழங்கிய

# வாழ்த்துச்செய்தி

### தென்மராட்சிக்கு பெருமை தேடித்தந்த உபவேந்தர்

சமீப காலப்பகுதியில் குறிப்பாக அறிவியற் பாடங்கள், சுயமொழியில் கற்பிக்க ஆரம்பித்ததின் பின்னர் தென்மராட்சியின் கல்வியில் மிளிர்ச்சியும், பெரு உயர்ச்சியும் ஏற்பட்டுள்ளமை பலராலும் அறியக்கூடியதொன்றே. இவற்றுக்கு எல்லாம் மகுடம் வைத்தாற்போல தென்மராட்சியைச் சேர்ந்த பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் ஈழத்தமிழர்களின் உயர் கல்விக்கூடமான யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் உபவேந்தராக உயர்வடைந்தது எமக்கு எல்லாம் பெருமகிழ்ச்சியே. தனது ஆரம்ப, இடைநிலைக் கல்வியை சாவகச்சேரி மகளிர் கல்லூரி மற்றும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கற்று இன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முதலாவது பெண் துணைவேந்தராக பதவியேற்றிருக்கிறார். எமது பிரதேசத்திற்கு அதியுயர் பெருமைதேடித் தந்த பேராசிரியரை எமது பிரதேச மக்கள் எல்லோரும் அகமகிழ்ந்து பாராட்டுவதில் நானும் பங்கெடுப்பதில் ஆன்ம திருப்தி கொள்கிறேன். அவரது பதவிக்காலத்தில் எமது பல்கலைக்கழகம் சகல வழிகளிலும் சிறப்படைந்து அவர் பல்கலைக்கழகத்திற்கும் எமது சமூகத்திற்கும் நல்லதோர் கலங்கரை விளக்காக பிரகாசிக்க, எல்லாம் வல்ல கெருடாவில் முருகக்கடவுளின் அருள் பெருக வேண்டுகிறேன்.□

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வைத்திய பணிப்பாளர்

டாக்டர் த. குகதாசன் அவர்கள் வழங்கிய

## *வாழ்த்துச்செய்தி*

தென்மராட்சி மண்ணில் வித்திலை விரித்து இன்று உலகின் சொத்தெனக் கிளை விரித்து நிற்கிறார் இவர்.

யாழ். பல்கலைக்கழகத்தின் தொடர்ச்சியான மேன்மைப் பணியில் அர்ப்பணிப்போடு செயற்பட்டு துணைவேந்தராக உச்சம் தொட்டு மிளிர்கின்றார் இத்தவச்செல்வியார்.

1983 ஆம் ஆண்டு பேராசிரியர் க. பாலசுப்பிரமணியம் அவர்களின் M.Sc. உயிரியல் இரசாயனக் கற்கைநெறியில் இவருடன் சேர்ந்து பயில்கின்ற சந்தர்ப்பம் கிடைத்தது. இம் மண்ணில் அப்போதிருந்த அசாதாரணச் சூழ்நிலையிலும் அயரா முயற்சியுடன் கற்றுத்தேறி, தம்மை நிலைநிறுத்தியவர் இவரென்றால் அது மிகையன்று.

கல்வித் தேர்ச்சியால் விரிவுரையாளராகத் தடம்பதிக்கத் தொடங்கிய காலந்தொட்டு, அயரா உழைப்பின் திறத்தால் படிகள் பலவற்றையும் கடந்து சிம்மாசனம் தொடும்நிலை இன்று சித்தித்திருக்கிறது.

தொடக்கத்தில் விரிவுரையாளராகவும் பின் துறைத்தலைவராகவும் அதன்பின் இணைப் பேராசிரியராகவும் தொடர்ந்து பேராசிரியராகவும் அதற்கு மேலாக மருத்துவபீடத்தின் முதலாவது பெண் பீடாதிபதியாகவும் முதுநிலைப் பேராசிரியராகவும் பதவியை எய்தியுள்ளார் என்றால், இது சாதாரணச் செயலல்ல என்பதைக் கல்வியுலகம் அறியும்.

இதனால்தான், ஈன்ற மண் இனியநல் விழாவெடுத்து மகிழ்கின்றது. வசந்தியார் விழாவில் 'வசந்தம்' மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு கொள்கின்றேன்.

இவராற்றலை இனங்கண்டு சுவீடன் நாட்டு உல்பா (Ulfa) பல்கலைக் கழகம், தன்னோடு இணைந்து பணியாற்றுமாறு இருகரமும் நீட்டியது. ஆனால், தமது மண்ணின் தரமுயர்த்த வேண்டுமென்ற தணியாத தாகத்தாலும், இம்மண்ணின் மாந்தரின் இடர்நீக்க வேண்டுமென்ற இணையற்ற விருப்பாலும் தமது உயர்ச்சியை நிராகரித்து இயங்குகின்றார். யாழ். மண்ணின் மருத்துவக் கல்லூரியில் இராப்பகல் பாராது அரும்பாடுபட்டு, அதனின் உயர்ச்சியே தமது உயர்ச்சியென அர்ப்பணித்தார்: புகழ் நிறைத்தார்.

எரிபொருள் தட்டுப்பாட்டால் இன்னல்பட்ட காலங்கள் எம் மண்ணில் பலவுண்டு. அக்காலங்களிற் கூட தமது 'சாளி' (Chally) யின் துணையுடன் பயணித்து, தகுதி நிறைந்த சேவையைத் தருவதில் அயராது பெருமை கொண்டார் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அவர்கள்.

யாழ். பல்கலைக் கழக மருத்துவபீடத்தின் 8 ஆம் அணியிலிருந்து இன்றுவரை கற்பிக்கும் ஒரேயொரு மருத்துவபீடப் பேராசிரியர் இவரே எனலாம். இது இவரின் உறக்கமற்ற உழைப்பினால் விளைந்ததென்பதைப் பலரும் அறிவர்.

இந்த உழைப்பும், இனிய சுபாவமும் இன்னும் பல்லாண்டு ஏற்றமாய்த் தொடரவேண்டும். இவரின் பணிகளால் இந்த மண் மட்டுமன்றி இவ்வுலகம் சிறக்க இறையருளை இறைஞ்சி, இதனை நிறைவு செய்கின்றேன்.□

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி

திருமிகு மாணிக்கவாசகர் கணேசராசா அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

பாரதி கண்ட புதுமைப்பெண் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அவர்கட்கு எனது உளமார்ந்த வாழ்த்துக்கள்.

கல்விக்காக ஓர் பெண்ணிடம் (சரஸ்வதியிடம்) மன்றாடும் சமுதாயத்தில் பல்கலைக் கழகத்தில் ஒரு பெண்ணாக இருப்பது சாலப்பொருத்தமானது.

பெண்ணைப் பேதை என்று உரைத்தவர்கள் இன்று பேதலித்துப் போனார்கள். பெண்ணை அடுப்பங்கரைக்குள் அடக்க நினைத்தவர் தீக்குளித்துப் போனார்கள்.

சம உரிமை, சம நீதி பேச்சளவில் அல்ல செயலிலும் மிளிர வேண்டும் என்பதை நிலைநாட்ட புறப்பட்ட வசந்தி, பெண்களின் வாழ்வில் வசந்தத்தை வீசும் அரசியாக, துணைவேந்தராக உருவாகி இருக்கிறார்.

துணைவேந்தர் பொறுப்பை ஏற்று பல்கலைக்கழகத்திற்கு தூணாக நின்று கலை அனைத்தையும் கற்கின்ற மாணவர்க்குச் சிறப்பாக ஊட்டி, வழிகாட்டி யாவரும் போற்ற வாழ்க என வாழ்த்துக்கள்.

கற்றறிந்த யாழ் சமூகம் பெண்ணைப் பெருமைப்படுத்தியதன் மூலம் கற்ற கல்விக்கு அர்த்தம் உண்டு என்பதை யாவருக்கும் உணர வைத்திருக்கிறது.

வசந்தியின் வழியில் பல பெண்கள் கால் தடம் பதிப்பார்கள். இந்தப் பெண்ணின் உயர்வு கண்டு அனைவரும் இங்கு ஆனந்தக் கண்ணீர் சொரிகிறார்கள்.

“வசந்தி எமது அரசி” என யாவரும் போற்ற எனது மனமார்ந்த வாழ்த்துக்களை துணைவேந்தர் வசந்தி அரசரட்ணத்துக்கு தெரிவித்து மகிழ்கிறேன். □

தென்மராட்சி பிரதேச செயலர்

# திருமதி அ. சாந்தசீலன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதற் பெண் துணைவேந்தராக நியமனம் பெற்றுள்ள பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அவர்கள் எமது தென்மராட்சிப் பிரதேசம் பெற்றெடுத்த கல்விச் செல்வம்! மேலும், எமது தென்மராட்சிப் பிரதேசத்தின் கல்வி எழுச்சிக்கான ஓர் மைல் கல்லாக துணைவேந்தர் அவர்களது நியமனம் மிளிர்கின்றது.

2000 - 2003 ஆம் ஆண்டு வரையில் முதலாவது பெண் மருத்துவ பீடாதிபதி என்ற சிறப்பையும் தனதாக்கிக் கொண்டவர் இவ்வம்மையார். சர்வ சாதனைகள் பல புரிந்த இவருக்கு யாழ். கல்விச் சமூகத்தைக் கட்டியெழுப்புகின்ற பாரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எமது துணைவேந்தர் பல்கலைக்கழகத்திலே, அஞ்சா நெஞ்சினராகவும், துணிச்சலுள்ள பெண்மணியாகவும் சரியான கருத்துக்களை நேருக்கு, நேராக உரைக்கும் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக உலாவருகின்றார். மருத்துவபீடமானது தற்போது மிக உத்வேகத்துடன் இயங்கிவருகின்றது. சொல்லில் மாத்திரம் அடக்காது, பல்கலைக்கழக வளாகம், மாணவர் விடுதி போன்றன தற்போது உன்னதமான தாய்மையுடன் விளங்குவ தற்காக துணைவேந்தர் அவர்கள் செயற்பாட்டிலே பெருமுயற்சி எடுத்து வருகின்றார். பெண்கள் கல்வியில் மட்டுமன்றி சகல துறைகளிலுமே முன்னேறலாம். சாதனைகள் பல படைக்கலாம் என்பதற்கு அம்மையார் அவர்கள் மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றார்.

ஓர் சமூகத்தின் எழுச்சிக்கு அடிப்படையான கல்விக்கு நிலைக்களனாய் விளங்கி புகழ் பல ஈட்டி எமது பிரதேசத்திற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்த்து பல்லாண்டு வாழ இறையருள் வேண்டி வாழ்த்துகின்றேன். □

தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர்

## திருமிகு கு. பிரேமகாந்தன் அவர்கள் வழங்கிய

## வாழ்த்துச்செய்தி

தென்மராட்சி மண்ணில் பிறந்து சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியவற்றில் பாடசாலைக்கல்வியை மேற்கொண்டு, இன்று கல்வியில் உயர்ந்து, யாழ்ப்பாண மக்களின் உயர்கல்விப்பீடமான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மிகவுயர் பதவியான துணைவேந்தர் பதவியை அணிசெய்து நிற்கும் பேராசிரியை வசந்தி அரசரட்ணம் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

சிலர் பதவியாற் பெருமை பெறுவர், சிலரால் பதவி பெருமை பெறும். அவ்வாறே பேராசிரியை வசந்தி அரசரட்ணம் அவர்களால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவி நிச்சயம் பெருமை பெறுகிறது.

இவர் தம் பதவிக்காலத்தில், மீண்டும் யாழ்ப்பாணக் கல்வித்தரத்தை உலகின் உன்னத நிலைக்குக் கொண்டுவர, அரும்பாடுபட, எல்லாம் வல்ல விநாயகப்பெருமானை வேண்டி வாழ்த்துகின்றேன்.☐

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி

## திருமிகு எஸ். கே. யோகநாதன் அவர்கள் வழங்கிய

# வாழ்த்துச்செய்தி

யாழ்ப்பாண கல்விப் பாரம்பரியத்தின் கலங்கரை விளக்காகத் திகழும் யாழ் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக தென்மராட்சி பிரதேசத்தின் புதல்வியான பேராசிரியர் செல்வி வசந்தி அரசரத்தினம் அவர்கள் பதவியேற்றுள்ளதையிட்டு தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவன் என்ற வகையில் நான் மட்டில்லா மகிழ்வும் பெருமிதமும் அடைகின்றேன்.

பாரம்பரிய பெருமைமிக்க தென்மராட்சி பிரதேசத்தின் புதல்வியான பேராசிரியர் செல்வி வசந்தி அரசரத்தினம் அவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வரலாற்றில் முதலாவது பெண் துணைவேந்தராக பதவியேற்றமை தென்மராட்சி மண்ணுக்கும் மக்களுக்கும் கிடைத்த பெருமை யாகும். இவரின் கல்விப்பணி அமைதியானதும் ஆழமானதும் ஆகும். இவரது கடின உழைப்புக்கும் கல்வித்துறையில் இவரின் காத்திரமான பங்களிப்புக்கும் கிடைத்த பரிசாகவே இவ் உயர் பதவி கிட்டியுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புதியதோர் அத்தியாயத்தை தோற்றுவித்துள்ள பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் அவர்கள் தன்முன்னே இருக்கும் சவால்கள் அனைத்தையும் எதிர்கொண்டு எமது பல்கலைக்கழகத்தின் தரத்தை சர்வதேச தரத்துக்கு மேம்படுத்தி எமக்கும் எமது நாட்டுக்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறையருளை வேண்டி வாழ்த்துகின்றேன். ☐

தென்மராட்சி, முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர்

## திருமதி புஷ்பா கணேசலிங்கம் அவர்கள் வழங்கிய

## வாழ்த்துச்செய்தி

தென்மராட்சி மண்ணின் தவப் புதல்வியாகிய செல்வி வசந்தி அரசட்ணம் அவர்கள், யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பதவி உயர்வு பெற்றமையின் பொருட்டு அவரைப் பாராட்டிக் கௌரவிக்கு முகமாக வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கின்றது.

சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் நான் ஆசிரியையாகப் பணியாற்றியபோது வசந்தி அங்கு மாணவியாக ஆரம்ப இடைநிலை வகுப்புக்களில் கல்வி பயின்று வந்ததுடன் இடைநிலை வகுப்புக்களில் விஞ்ஞானம், இரசாயனம் ஆகிய பாடங்களை என்னிடம் கற்றார். எல்லா வகுப்புக்களிலும் இவர் முதல் நிலை மாணவியாக விளங்கியதுடன் கற்றல் செயற்பாடு களில் அதீத ஆர்வம் கொண்டிருந்தார். அத்துடன் இணைப்பாடவிதான செயற்பாடு களிலும் பல் திறமைகளை வெளிப்படுத்தி பாராட்டுக்களையும் பரிசில்களையும் பெற்றார்.

ஓர் இலட்சிய மாணவிக்குரிய நற்பண்புகளின் உறைவிடமாக அவர் இலங்கியதால் பாடசாலைச் சமூகத்தின் கணிப்புக்கும் விருப்புக்கும் பாத்திரமாக விளங்கினார். பாடசாலைப் பராயத்திலேயே தலைமைத்துவப் பண்புகளின் பிரதிபலிப்பை அவரிடம் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. எனது நட்புக்கு பாத்திரமாக விளங்கிய வசந்தியின் தாயார் தனிப் பிள்ளையான தன் செல்ல மகளை கனிவு கலந்த கட்டுப்பாட்டுடன் வளர்த்து நல்வழிப்படுத்திய பாங்கு இந்நேரத்தில் என் நினைவில் நிழலாடுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகத் தனது பணியை ஆரம்பித்து இள வயதிலேயே பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றதுடன் பல்வேறு ஆய்வுகளுக்காகச் சிறப்புப் பெறும் போதெல்லாம் இவர் எனது மாணவியாக இருந்தமையையிட்டு நான் பெருமிதம் கொள்வதுண்டு. எனது பெரு விருப்புக்குரிய மாணவியான வசந்தி என்னைக் காணுந்தோறும் அகமும் முகமும் மலர அன்பை வெளிப்படுத்தும் பாங்கு அவரது குரு பக்திக்குச் சான்றாகும். அவரை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

மொழித்திறமையும், சிறந்த ஆளுமைப் பண்பும் கொண்ட செல்வி வசந்தியின் தலைமைத்துவத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் புதிய உத்வேகம் பெற்று உயர்நிலை அடைவது திண்ணம்.

அர்ப்பணிப்பும் நியாய சிந்தையும், ஆரச் சிந்தித்துச் செயலாற்றும் பாங்கும் கொண்ட செல்வி வசந்தி அரசரட்ணம் துணைவேந்தராகத் தனது கடமைகளைச் சீருடனும் சிறப்புடனும் ஆற்றி மேன்மை பெற்றிட எனது நல்லாசிகள். □

சாவகச்சேரி இந்துக்கல்லூரி (தேசிய பாடசாலை) அதிபர்

# திருமிகு அ. கயிலாயபிள்ளை அவர்கள் வழங்கிய வாழ்த்துச்செய்தி

இலங்கைத் தமிழரின் அதிஉயர் கல்வி நிறுவனமாகவும், பண்பாட்டு மையமாகவும் விளங்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதற்பெண் துணை வேந்தராகவும், பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிப் பாதையிலே அதை நிருவகிக்கும் எட்டாவது துணைவேந்தராகவும் நியமனம் பெற்றிருக்கும் பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் அவர்களை வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் பிறந்து சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும், சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும் பெற்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்த பேராசிரியை அவர்கள் 1984-ம் ஆண்டிலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவத்துறையில் உயிர் இரசாயனத்துறை விரிவுரையாள ராக நியமனம்பெற்று துறைத்தலைவர் இணைப்பேராசிரியர் என்ற தளங்களைக் கடந்து, பேராசிரியர் பதவியை 1998 ஆம் ஆண்டில் அடைந்தார். 2000 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் முதல் பெண் பீடாதிபதி என்ற பெருமையையும் பெற்றார். 2011 ஏப்ரல் 01 முதல் துணைவேந்தர் என்ற பெருமைசால் பதவியைப் பெற்றுள்ளார்.

தென்மராட்சியில் பிறந்து தென்மராட்சியின் புகழ்பெற்ற சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்ற ஒருவர் துணைவேந்தராக உயர்ந் திருப்பது தென்மராட்சிப் பிரதேச மக்களுக்கும், மாணவர்களுக்கும் பெருமையையும், உத்வேகத்தையும் அளிப்பதாயுள்ளது.

தமிழ்ப்பெண்கள் சமூக ரீதியில் எழுச்சி பெற்றுள்ளதையும் பெண்களின் பெருமையை எமது சமூகம் போற்றத் தலைப்பட்டுள்ளதையும் இந்நியமனம் எடுத்துரைக்கின்றது. வரலாற்றுக் காலம் முதல் ஆண்கள் வகித்து வந்த உயர் பதவிகள் பெண்களிடம் தற்போது வருவதையிட்டு தமிழ் இனம் பெருமைப்படவேண்டும். தமிழ்ப்பெண்களின் கல்வி அறிவு உயர்கல்வி, முகாமைத்துவத்திறன் என்பவற்றின் தகுதிப்பாடுகள் எமது தமிழ்ச்சமூகத்தின் எழுச்சிக்கும் உயர்ச்சிக்கும் வித்திடுவனவாக அமையும் என்பது உறுதியாகும். யாழ். மாவட்ட அரச அதிபர், யாழ். மாநகர மேயர், உள்ளூராட்சி ஆணையாளர், வலயக்கல்விப் பணிப்பாளர், மேலதிக அரச அதிபர், பிரதேச செயலாளர்கள் என பெண் அதிகாரிகளின் வரிசையில் சிகரம் வைத்தாற்போல் எமது பேராசிரியை விளங்குகின்றார்.

துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரத்தினத்துக்கு விழா எடுப்பதன்மூலம் தென்மராட்சி மண் பெருமையடைகின்றது. இவரது காலத்தில் சகல துறைகளிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உயர்ச்சியடைந்து எமது பிரதேச தனித்துவங்களை நிலைநாட்ட வேண்டும் என வாழ்த்துகின்றேன். □

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி முதல்வர்

## திருமிகு க. அருந்தவபாலன் அவர்கள் வழங்கிய

## *வாழ்த்துச்செய்தி*

பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக நியமனம் பெற்றதை பெருமைப்படுத்தும் வகையில் வெளியிடப்படும் விழா மலரினூடாக அவரை வாழ்த்துவதில் மிக்க மகிழ்வடைகிறேன்.

பயன்தரு மரங்களும், பசுந்தோப்புக்களும் நிறைந்ததால் குழைக்காடு எனச் சிறப்பிக்கப்படும் தென்மராட்சி மண்ணிலிருந்து சமூகத்தின் அதியுயர் கல்வி நிறுவனமாகிய பல்கலைக் கழகத்தின் முதல்வராக உயர்வு பெற்றமை உன்னதமான சாதனை ஆகும். அதுவும் தமிழர் தாயகத்தின் குறியீடுகளில் ஒன்றான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது பெண் துணைவேந்தரானமை எல்லோருக்கும் பெருமைதரும் ஒரு நிகழ்வாகும். இத்தகைய பெருமைக் குரிய உச்சமொன்றை தொட்டு நிற்கும் பேராசிரியரால் பெருமைப்படும் தென்மராட்சி மக்களில் முதன் மகனாக நான் இருப்பதில் பெருமை அடைகிறேன்.

சாவகச்சேரியிலுள்ள புகழ்பூத்த கல்லூரிகளில் கல்வி கற்று உயர்கல்விபெற்று, பல்வேறு பட்டங்களை தன் திறமையினால் வரித்து முதுநிலைப் பேராசிரியராக உயர்ந்து துணைவேந்தராக மிளிரும் அவர் கொண்ட அக்கறை, ஆய்வுகளில் துறைபோகும் தன்மை, மாணவர்களை வழிப்படுத்துவதில் காட்டும் அர்ப்பணிப்பு, நேர்மை மற்றும் விடாமுயற்சி எல்லாம் இணைந்து முகிழ்த்ததே அவரின் இந்த உயர்வு. அதில் அவர் பெற்றுக்கொண்ட கசப்பான இனிப்பான பட்டறிவுகள் யாவும் இன்றைய இளைய தலைமுறையினர்க்கு நல்ல எடுத்துக்காட்டுக்கள். குறிப்பாக எம்மினப் பெண்களுக்கு அவர் ஒரு நடைமுறை உதாரணம். சாதனைகள் பல புரிந்த இம்மண்ணின் மகளிர்களில் இவர் இன்னொரு துறைக்கான சாதனையாளர்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் தொடக்கம் புகழ்பூத்த பல்வேறு துணைவேந்தர் வரிசையில் பேராசிரியர் வசந்தி அவர்கள் தனக்கேயுரித்தான தடத்தைப் பதித்து இன்னும் பலபடிகள் எமது பல்கலைகழகத்தை மேல்நோக்கிக் கொண்டு செல்வார் என்பது திண்ணம். அவரின் அனைத்து முயற்சிகளும் வெற்றிபெற வாழ்த்துவதுடன் அவரின் இஷ்ட தெய்வமான அம்மனின் அருளையும் வேண்டி நிற்கிறேன்.□

சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர்

## திருமதி சிவத்திரை சிவநாதன் அவர்கள் வழங்கிய
## வாழ்த்துச்செய்தி

கனிதரும் மரங்களும் நிழல் தரும் விருட்சங்களும் செல்வத்தை அள்ளிச் சொரிந்திடும் வளம் தரும் நெற்களனிகளும் நிறைந்தது தென்மராட்சிப் பிரதேசம். இங்கு ஈழத் தமிழர் கல்விப் புலத்தின் கரும வீராங்கனையாகப் புகழ்பூத்தவர் செல்வி வசந்தி அரசரட்ணம் அவர்கள். இவர் யாழ். மண்ணில் சிறப்புடன் இயங்கும் உயர்கல்வி நிறுவனமான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உபவேந்தராகப் பதவியை ஏற்றுக் கொண்டதையிட்டு மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

சிரித்த முகத்துடன் சீரிய செயற்றிறன் கொண்ட மாணவியாக எமது கல்லூரியில் கல்வி பயின்றார். விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பதற்கிணங்க அவர் கற்றற்றிறன், நுண்மதி, அமைதி, இறைபக்தி, தலைமைத்துவம் போன்றவற்றில் சிறப்புடன் விளங்கினார். இதன் பயனாக இளமையிலே கலாநிதிப் பட்டத்தினையும் பெற்று மருத்துவ பீடாதிபதிப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார்.

"நெஞ்சத்து நல்லம்யா மென்னும் நடுவுநிலைமையாற்
கல்வி அழகே அழகு"

என்ற நாலடியார் கருத்துக்கிணங்க அழகு தருபவராக கல்வியே வாழ்க்கை, அதற்கேற்ப தொழிற்படுதலே தனது இலட்சியம் என வாழ்ந்து வருபவர். அதுமட்டுமல்ல "திண்ணிய நெஞ்சம் வேண்டும், தெளிந்த நல்லறிவு வேண்டும்" என்னும் பாரதியார் கூற்றுக் கிணங்க உறுதியான மனத்துடனும் தொலைநோக்குடனும் தனது பணிகளைச் சிறப்புடன் செய்தார்.

தமது கல்வியிற் பெற்ற அனுபவங்கள், சவால்கள் என்பவற்றை பாடமாகக் கொண்டு முழுமையாக யதார்த்தமாக்குவதில் சிறப்புடையவராக காணப்பட்டார். இவ்வாறாக செயற்பட்ட தன் விளைவாக நேர்மையுடனும் விசுவாசத்துடனும் பணிபுரியும் மருத்துவர் குழுவினரையும் உருவாக்கினார். இதுமட்டுமல்ல மிகுந்த உயர்ந்த கொள்கைகளையும் இலட்சியங்களையும் கொண்ட மேதையாக செயற்பாட்டாளராக கருதப்பட்டார். அதற்கு காரணம் இரவு பகல் பாராத உழைப்பு. சுருங்கக் கூறின், பசித்திருந்து, விழித்திருந்து, தனித்திருந்து கடமை புரிபவர். அத்தகைய அர்ப்பணிப்பு மிக்க சேவையின் அடையாளமாகவே பல்கலைக் கழகத்தின் முதற்பெண் உபவேந்தர் என்ற புகழ்மாலை கிடைத்தது.

யாழ்ப்பாணத்திற்கு புகு வாசலாக இருப்பது தென்மராட்சி. இப்பிரதேசத்தின் நிறைவு, பொலிவு, சிறப்பு, யாழ். குடாநாட்டுக்கே கட்டியம் கூறுவதுபோல் அமையும். ஆகவே இவரது துணைவேந்தர் பதவியானது யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தில் ஓர் புதிய மாற்றத்தை, ஏற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. எனவே, அடக்கமும் அமைதியும் அறிவும் ஆற்றலும் கொண்ட எமது யாழ். பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் அவர்கள் செயற்கரிய செயல்கள் செய்து பிறந்த மண்ணிற்கும் பெற்றோரிற்கும் பெருமை சேர்த்த பேராண்மையாளர். இவர் திருமலிந்த கல்விப் பெட்டகமாய் மலர, கவின் பெற, நிறைவுடன் நீடூழி வாழ எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களை வழங்குகின்றேன். □

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர்

திருமிகு வ. ஸ்ரீபிரகாஸ் அவர்கள் வழங்கிய

# வாழ்த்துச்செய்தி

## எமது மண் பொலிவு பெறட்டும்

மா, பலா, வாழை என்னும் முக்கனிகளும் நிறைந்த வளமான மண்ணிலிருந்து நிறைவான ஆற்றலோடும் வலிமையான அறிவோடும் யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் என்னும் உன்னத பதவியை அலங்கரித்து முதற்பெண் என்று வரலாற்றில் சாதனை செய்தவர் எங்கள் தென்மராட்சிப் பிரதேசத்தின் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் என்பதில் நாமெல்லாம் உவகை அடைகின்றோம். பெருமை கொள்கின்றோம்.

அவர் வரவால் தென்மராட்சியின் கல்விப்புலம் புத்துணர்ச்சி பெறுகின்றது. கல்விச் சமூகம் புத்தெழுச்சிபெற்று நிமிர்ந்து நிற்கின்றது. கல்வியின் கடின உழைப்பின் பயனையும் அதில் அப்பழுக்கற்ற சேவையின் பயனையும் பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்தின் உயர்ச்சி நமக்கெல்லாம் காட்டி நிற்கின்றது.

திறந்த பொருளாதாரம் போல் சடுதியாக திறந்துவிட்ட சுதந்திரத்தில் சிக்கித்திணறி விழி பிதுங்கி நிற்கும் இளைஞர்களே, யுவதிகளே, சாதனை செய்வீர்.

பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்தால் எம் மண் பெருமையடைவதற்கு ஒப்பான பெருமைகளை எம் மண்ணிற்கு நீரும் ஈட்டித் தருவீர்.

வளம் நிறை மண்ணின் தளம் நாட்டிய செல்விக்கு உளம் நிறை வாழ்த்துக்கள்.□

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவி

# திருமதி லோ. நவரத்தினம் அவர்கள் வழங்கிய வாழ்த்துச்செய்தி

கல்விப் புலத்திலே சிறந்து விளங்கி யாழ். பல்கலைக்கழகத்திலே துணைவேந்தராகப் பதவியேற்ற பேராசிரியர் செல்வி வசந்தி அரசரத்தினம் அவர்களின் பாராட்டு விழாவிற்கும் சிறப்புமலர் வெளியீட்டுக்கும் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அளவிலா ஆனந்தம் அடைகின்றேன்.

எல்லா வளங்களும் அமையப் பெற்ற தென்மராட்சியின் தலைமையூராம் சாவகச்சேரியில் துணைவேந்தர் அவர்கள் பிறந்து வளர்ந்து கல்வியில் உயர்ந்து பெண்ணினத்திற்கே பெருமை தேடித் தந்திருக்கின்றார்.

வானத்திலே கோடிக்கணக்கான விண் மீன்கள் தோன்றி மறைகின்றன. எல்லா நட்சத்திரங்களும் ஒளி வீசுவதில்லை. ஒரு சில மட்டுமே ஒளி வீசிப் பிரகாசிக்கின்றன.

அந்த வகையில் துணைவேந்தர் அவர்கள் கலங்கரை விளக்காக பல்கலைக்கழக மாணவர்களுக்கும் எம் கல்விச் சமூகத்தினருக்கும் வழிகாட்டியாக ஒளி வீச வருகின்றார். மருத்துவ பீடாதிபதியாக அரும் பெரும் சேவையாற்றி யாழ். பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகப் பதவி ஏற்றிருப்பது மகளிராகிய எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது.

அந்த வகையில் சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் எமது உளம் நிறைந்த பாராட்டுக்களை தெரிவிப்பதோடு துணைவேந்தர் அவர்கள் சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வு வாழ இறையருள் வேண்டி பணிகின்றோம்.□

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முதலாவது பெண் துணைவேந்தராகப் பதவியேற்றுள்ள

தென்மராட்சியின் புதல்வி

## பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் அவர்களை

தென்மராட்சி மக்கள் வாழ்த்தி மகிழும்

## வாழ்த்துப்பா

பேரா சிரியை வசந்தி அரசரட்ணம்
பாரோர் புகழும் நிலையெய்தி - சீரார்ந்த
யாழ்பல் கலையின் துணைவேந்த ராகியின்று
வாழ்கின்றார் மேன்மையுற வாழ்த்து.

தென்மராட்சிமண் செய்த தவப்பயன்
தென்றலாயிங்கு வந்து கனிந்தது
இன்முகத்தொடு இனிய வசந்தியாய்
எங்கள் நீள்நிலம் மீதில் தவழ்ந்தது
கன்னல் பாகெனக் கற்கண்டாமெனக்
கல்விச்சாலைகள் கண்ணைச் சிமிட்டவே
சின்னச் சிறுமியாய் இந்துவில், மகளிரில்
சேர்ந்து கல்வி பயின்றதை வாழ்த்தினோம்.

பட்டப் படிப்பினைப் பாரத பூமியின்
பல்கலைக்கழகம் பாய்ச்சி நிறைத்தது
வட்டமுகத்தொளி மங்கை வசந்தியை
விஞ்ஞான மானியாய் வனைந்து கொடுத்தது
கெட்டித்தனமது கொட்டிக்கிடந்ததால்
கொழும்பின் பல்கலை எம்.எஸ்.சி (M.Sc) ஈந்தது
மட்டற்ற மகிழ்ச்சியில் யாழின் பல்கலை
மனம்நிறை கலாநிதி தந்ததை வாழ்த்தினோம்.

எண்பத்து நான்காம் ஆண்டினில் அகவை
இருபத்து ஐந்தினை எய்திடும் போதே
விண்தொடும் புகழொடு இம்மண்ணின் செல்வியார்
விரிவுரையாளராய் விரியுந்தொடக்கமும்
பண்புற்ற நெஞ்சமும் பல்கலை மாட்சியும்
பேராசிரியப் பெருமையும் சேரவே
பெண்பெற்ற பேறெனப் பீடாதிபதியாய்
பெரும்புகழ் கொண்டதைக் கண்டும்நாம் வாழ்த்தினோம்.

உயிரியல் இரசாயனம் உவந்து நல்கிய
உயர்வின் உச்சமாய் இன்றையபொழுதிலே
பயிரின் விளைச்சல்போல் பல்கலைக் கிரீடமாய்ப்
பலரும் போற்றிடும் துணைவேந்தர் ஆயினார்
அயர்விலாதநல் ஊக்கமும் அன்புமாய்
அம்மையார் இனிநாளும் மகிழ்ந்திட
வயல்கொள் வாரி வனத்தின் ஈசனை
வழுத்தினோம் இவர் வாழ்க வாழ்கவே.

பாவாக்கம்: குழையூரன் ச. மார்க்கண்டு
(தென்மராட்சி கலைமன்ற இலக்கிய வட்டம்)

- விழாக்குழுவினர்.

தென்மராட்சியின் தவப்பேறான

செல்வி வசந்தி அரசரத்தினம்

யாழ். பல்கலைக்கழகத்து முதற்பெண் துணைவேந்தராக பெரும் பொறுப்பினை

ஏற்ற ஞான்று உவகை மீதூர இம்மண்ணின் மைந்தனொருவன்

தன்னுறவுகளோடிணைந்து

அகங்குளிர அவரை வாழ்த்தி வழங்கிய

## பாராட்டிதழ்

### நேரிசை வெண்பா

பல்லோர் விதந்தேத்தும் பார்புகழ் மருத்துவத்தில்
வல்லாளெம் வசந்தி புகழ்பாட - எல்லாமாய்
நின்றாளும் எம்பெருமான் இணையடியே எந்நாளும்
பொன்றாத் துணையென் றறி.

### அறுசீர் விருத்தம்

தென்மரின் பெயர்பல் காலும்
தெருவெலாம் ஒலிக்கச் செய்த
இன்னமு தனைய செல்வி
இசைமலி வசந்தி நங்காய்!
முன்புரி தவத்தா லன்றி
முகிழ்ந்திடாப் பெருமை எல்லாம்
உன்னது ஆக்கிக் கொண்டாய்
உயர்ந்துநீ சிறப்பாய் வாழி!

### கட்டளைக் கலித்துறை

அள்ளித் தெளிக்கும் அறிவுச் சுடருடன் ஆன்திறத்தாய்
உள்ளத் தெளிவோ டுறுபயனே கருத்தாக நின்று
கள்ளத் தனமுடையார் வழிச்சேற லெஞ்ஞான்று மின்றி
மெள்ளப் பெரும்பணி யாற்றுக மண்ணிடை மாண்புறவே!

ம. கங்காதரம்

சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
முன்னாள் பிரதி அதிபர்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

# மண் மாண்புற வந்த மாதவச் செல்வி

ச. லலீசன்,
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண்
இளைப்பில்லைக் காண்"

என்ற மகாகவி பாரதியின் வாக்கு மெய்ப்பட எம்மண்ணிற் பிறந்தவர்தான் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம். உள்ளத்தாலும் உருவத்தாலும் உயர்ந்த இந்நங்கையின் ஏற்றம் எம்மவர்களுக் கெல்லாம் முன்னுதாரணமாகக் கொள்ளத்தக்கது.

வரலாற்றுக்கு முந்திய காலகட்டம் தாய்வழிச் சமூகமாக உயர்வு பெற்றிருப்பினும் உற்பத்திச் செயற்பாட்டின் வடிவமாற்றங்கள் தந்தைவழிச் சமூகத்தின் உயர்வுக்கு வித்திட்டது. இன்று அறிவியல் பொருளாதாரம் சார்ந்த எழுச்சி ஆண் பெண் சமத்துவத்திற்கும் பெண் நிலைவாதத்தின் உயர்விற்கும் வழிகோலியுள்ளது. இத்தகைய பின்புலத்திலேயே பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும் பெண் துணைவேந்தர் என்ற பெருமையைப் பெறுகின்றார்.

## பிறப்பும் ஆளுமை உருவாக்கமும்



எங்கள் துணைவேந்தரைப் பெற்றெடுத்த தாய் தந்தையர்
*அரசரட்ணம் யோகவதி தம்பதியர்*

கொக்குவிலூரைச் சேர்ந்த பொது வேலைப் பரிசோதனை மேலாளர் (P.W.D. Overseer) திரு. எஸ். ஏ. அரசரட்ணம் சாவகச்சேரி சிவன்கோவிலடியைச் சேர்ந்த யோகவதி என்ற பெண்ணிற் பெருந்தக்காளைக் கரம்பற்றி இயற்றிய இல்லற வாழ்வின் நன்கலமாக 1959.06.26 ஆம்நாள் தென்மராட்சி மண் மாண்புறப் பிறந்தவரே எங்கள் வசந்தி. குடும்பத்தில் ஒரே பிள்ளையாதலால் இவரே செல்ல(வ)ப் பிள்ளை. சாவகச்சேரி சிவன் கோவிலையும் கண்டி வீதியையும் இணைக்கும் சாலையில் 'சுந்தர வாசம்' இன்றும் இவர்தம் பசுமை நினைவுகளைச் சுமந்தவண்ணம் இருக்கிறது.

தந்தையாரின் அலுவலகப் பணியிடத்திற்கேற்ப நங்கை வசந்தியின் பாடசாலை வாழ்வும் அமைந்திருந்தது. ஆரம்பக் கல்விக்கான அடித்தள உருவாக்கம் நெடுங்கேணி

மகா வித்தியாலயத்திலும் புசல்லாவை பரி. திருத்துவக் கல்லூரியிலும் இடம்பெற்றது. 1969 இல் சொந்த ஊருக்குத் திரும்பிய அரசரட்ணம் குடும்பத்தினர் தமது வீட்டிற்கு அருகில் உள்ள சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் தரம் நான்கு மாணவியாக வசந்தி அம்மையாரை இணைத்தனர். அதிபர்களான திருமதி வைத்திலிங்கம், திருமதி. சிவசங்கரம் ஆகியோரது ஆளுமைத்திறன், மண் மாண்புற வந்த தவடீகளை அன்றே இனங்கண்டது. 1973 இல் இடம்பெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் நங்கை வசந்தி பெற்ற உயர் பெறுபேற்றிற்கு மதிப்பளிக்கும் விதமாக பரீட்சை முடிவு வெளிவந்த தினத்தை கல்லூரியின் அரைநாள் விடுமுறையாக அறிவித்தனர். இப்பெருமையை இன்றும் ஊரவர்கள் நினைவிற் கொண்டுள்ளனர்.

உயிரியல் விஞ்ஞானத்துறையில் கற்பதற்காக சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் சேர்ந்து கொண்ட நங்கை வசந்தியின் ஆளுமை உருவாக்கத்தில் அதிபர் வெற்றிவேலுவின் முன்மாதிரிகளும் சிறப்பிடம் பெற்றன. இந்துக் கல்லூரியில் கல்வி போதித்த விலங்கியல் ஆசான் திரு. சிவலோகநாதனே உயிர் இரசாயனத்துறை மீதான நாட்டம் தன்னில் உருவாக அத்திபாரமிட்டவர் என்று பேராசிரியர் வசந்தி அடிக்கடி கூறுவதுண்டு.

இளவயதில் தந்தையை இழந்தாலும் அன்னை யோகவதியின் அர்ப்பணிப்பான வழிகாட்டல்கள் வசந்தி அம்மையாரின் வாழ்வு வளம்பெற வழிசமைத்தது. கல்விசார் நடவடிக்கைகளாகட்டும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளாகட்டும் தன் ஒரே மகளுடன் தானும் கூடச் செயற்படும் அந்தத் தாயின் தியாகம் சொல்லில் அடங்காதது.

**பல்கலைக்கழகக் கல்வி**

உயிர் இரசாயனத்துறையைக் கற்கும் ஆர்வ மேலீட்டால் சென்னைப் பல்கலைக் கழகத்தில் அனுமதியைப் பெற்றுக் கொண்ட வசந்தி 1977 – 1981 கல்வியாண்டில் உயிர் இரசாயனம், இரசாயனவியல், பௌதிகவியல் ஆகிய பாடங்களைப் பயின்று முதற்பிரிவில் சித்தியடைந்து இளவிஞ்ஞானமாணிப் பட்டத்தைப் (Bachelor of Science) பெற்றுக் கொண்டார்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உயிர் இரசாயனத்துறையில் 1982 – 1984 கல்வியாண்டில் பேராசிரியர் கந்தையா பாலசுப்பிரமணியத்தின் வழிகாட்டலில் “Immobilization and kinetic studies of $\alpha$ - amylase and glucoamylase” என்ற தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டு முதுவிஞ்ஞானமாணி (Master of Science) பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

தனது முனைவர் பட்டக் கற்கையை (Doctor of Philosophy) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1985 – 1989 கல்வியாண்டிற்குரிய காலப்பகுதியில் மேற்கொண்டார். இக்காலப்பகுதியில் யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் கந்தையா பாலசுப்பிரமணியம், சுவீடன் லுண்ட் பல்கலைக்கழகப் (Lund University) பேராசிரியர் பு. மத்தியாசன் (Prof. B. Mattiasson)

ஆகியோரது வழிகாட்டலில் "Bioconversion of starch to glucose as feedstock for the production of ethanol, lactic acid and fructose" என்ற தலைப்பில் ஆய்வேட்டைச் சமர்ப்பித்தார். இந்த ஆய்வு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினதும் சுவீடன் லுண்ட் பல்கலைக் கழகத்தினதும் இணைப்பு ஆய்வாக மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**பல்கலைக்கழக ஆசிரியராக ...**

உயிர் இரசாயனத் துறையில் பட்டப் படிப்பை நிறைவு செய்த நிலையில் 1984 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் உயிர்இரசாயனத்துறையில் உதவி விரிவுரையாளராக இணைந்து கொண்டார். தொடர்ந்து விரிவுரையாளர் (1985 – 1990), சிரேஷ்ட விரிவுரையாளர் (1990 – 1995) இணைப் பேராசிரியர் (1996 – 1998), பேராசிரியர் (1998 – 2007), சிரேஷ்ட பேராசிரியர் (2007 முதல்) என உயர்வுகளைக் கண்டார். யாழ். பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட பேராசிரியர் என்ற தகைமையில் தற்போது உள்ளவர்களில் வயதில் இளையவர் என்ற பெருமையும் பேராசிரியர் வசந்திக்கு உண்டு.

**பல்கலைக்கழக நிர்வாகியாக ...**

பேராசிரியர் வசந்தியின் ஆளுமைத்திறத்தைக் கண்ட பல்கலைக்கழக நிர்வாகம் உயிர் இரசாயனத்துறைத் தலைவராகவும் (1990 – 2000) மருந்தியல் துறைத் தலைவராகவும் (Head, Department of Pharmacology) (2003 – 2009) அவரைத் தெரிவு செய்தது. மேலும் 2000 – 2003 கல்வியாண்டில் மருத்துவபீடப் பீடாதிபதியாகவும் பேராசிரியர் சேவையாற்றினார்.

ஐந்து ஆண்டுகளுக்குரிய மருத்துவப் பீடக்கற்கை நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளால் எட்டு ஆண்டுகள் இடம்பெற்றது. மாணவரதும் அவரால் பயன்பெறப் போகின்ற சமூகத்தவரதும் நன்மை கருதி விசேட ஏற்பாடுகளை மேற்கொண்டு இக்கற்கை நெறிக் காலத்தை ஆறு ஆண்டுகளாக மாற்றி அமைத்த பெருமையும் பேராசிரியரையே சாரும். துறைசார் எழுச்சிக்குப் பெண் ஆளுமைகளாலும் முடியும் என்பதை இப்பதவிகளில் இருந்தவாறு பேராசிரியர் சாதித்துக் காட்டினார்.

**ஆய்வுத்துறைக்கான நிதிபெற வழிவகுத்தமை**

ஆய்வுத்துறைகளுக்கான நிதியைப் பெற்றுக் கொள்வது சாதாரணமான விடயமன்று. ஆயினும் பல மில்லியன் ரூபாய்களை பேராசிரியர் தனது துறைசார் எழுச்சிக்காகப் பெற்றுக் கொடுத்துள்ளார். யாழ். பல்கலைக்கழகம், சுவீடன் லுண்ட் பல்கலைக்கழகம் ஆகியன மேற்கொண்ட இணைப்பாய்வின் பயனாக Sida/SAREC வேலைத்திட்டத்தின் கீழ் 8 மில்லியன் சுவிடிஸ் குரோனரை (Swedish kroner) (இலங்கை மதிப்பில் 128 மில்லியன் ரூபா) (2000 – 2010) தான் சார்ந்த துறைக்காகப் பெற்றுக்கொடுத்துள்ளார். மேலும் இரசானவியல் சார்ந்த

சர்வதேச நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2 மில்லியன் சுவிடீஸ் குரோனரையும் (இலங்கை மதிப்பில் 32 மில்லியன் ரூபா) பெற்றுக் கொடுத்துள்ளார். இவை தவிர வேறுபல வேலைத் திட்டங்களூடாகவும் மருத்துவத்துறை நிதியீட்டம் பெற வழிவகைகள் மேற்கொண்டார்.

### சர்வதேச ஆய்வாளர்

பேராசிரியர் வசந்தியின் ஆய்வுத் துறை உயிர் இரசாயனம், உயிர் தொழினுட்பம் சார்ந்ததாக விளங்குகின்றது. நீரிழிவு, போதைப்பொருள் பாவனை, புகைத்தல் விளைவுகள், நொதியப் பொறியியல் (Enzyme engineering) முதலிய விடயங்களில் 65 இற்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இடம்பெற்ற ஆய்வரங்குகளில் இவரது ஆய்வுக் கட்டுரைகள் சிறப்பிடம் பெற்றுள்ளன.

ஆய்வுத் துறை சார்ந்த பல மாணவர்களுக்கு வழிகாட்டியாகவும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் வெளிவாரி மதிப்பீட்டாளராகவும் சர்வதேச ஆய்வேடு களுக்கான மதிப்பீட்டாளராகவும் செயற்பட்டு வருகின்றார். இற்றை வரையில் இவரது வழிகாட்டலில் உயிர் தொழினுட்பஞ் சார்ந்து எழுவர் முதுவிஞ்ஞானமாணி (M.Sc.) பட்டத்தை யும் அறுவர் முதுதத்துவமாணிப் பட்டத்தையும் (M.Phil.) நால்வர் முனைவர் (Ph.D.) பட்டத்தையும் பெற்றுள்ளனர். இந்தியா, தாய்லாந்து, சுவீடன் நாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் ஆய்வுத் துறை சார்ந்த இணைப்புக்களை பேராசிரியர் பேணி வருகின்றமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

### கலைத்திட்ட (Curriculum) வடிவமைப்பாளர்

கற்கைநெறிகளின் வெற்றியின் பெரும்பங்கு கலைத்திட்ட வடிவமைப்பிற் தங்கியுள்ளது. யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட உயிர் இரசாயனவியல் கலைத்திட்ட வடிவமைப்புக்கு மேலதிகமாக மனைப்பொருளியலில் இளங்கலைமாணி (B.A. in Home Economics) மற்றும் ஆய்வுகூடத் தொழினுட்பவியல் இளமாணி (B.Sc. in MLS) இயன் மருத்துவவியலில் டிப்ளோமாதாரி (Diploma in Physiotherapy) முதலிய பட்ட நெறிகளுக்கான கலைத்திட்டங்களை (Curriculum) வடிவமைத்து வழங்கியுள்ளார். இவை பயனுறுதித் தன்மை மிக்க கலைத் திட்டங்களாக இன்று அமுற்படுத்தப்படுகின்றன.

### யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர்

1974 இல் எம்மண்ணின் உயர்கல்விச் சின்னமாக உதயமாகிய யாழ். பல்கலைக்கழகம் பல ஆளுமை மிக்க துணைவேந்தர்களின் சீரிய வழிகாட்டலில் வளர்ச்சியைக் கண்டு வருகின்றது. இந்த வகையில் எட்டாவது துணைவேந்தருக்கான தேர்தலில் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெற்று முன்னிலை பெற்றார். இதன் நிமித்தம் 28.03.2011 தொடக்கம் செயற்படும்படியாக யாழ். பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக நியமனம் பெற்றார். ஏப்ரல் 1 ஆம் நாள் வெள்ளிக்கிழமை தனது பதவியை

ஏற்றுக்கொண்டார். **இந்நியமனம் தாய்க்குலத்தவர் பெற்ற கௌரவமாகவும் தென்மராட்சியர் செய்த மாதவமாகவும் நோக்கத்தக்கது.**


பேராசிரியர் சாவித்திரி


பேராசிரியர் உமா குமாரசாமி


பேராசிரியர் ஷானிகா

இலங்கையின் கல்வி வரலாற்றில் 1999 இலேயே பெண் ஒருவர் துணைவேந்தராக நியமனம் பெறும் வாய்ப்புக் கைகூடியது. இந்த வகையில் துணைவேந்தராக நியமனம் பெற்ற நான்காவது பெண் என்ற பெருமை வசந்தி அம்மையாருக்கு உண்டு. கொழும்புப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சாவித்திரி குணசேகர (Prof. Savitri Goonesekere) இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் உமா குமாரசுவாமி, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் ஷானிக்கா சன்னஸ்கல 'ஹிறிம்புரேகம (Professor. Kshanika Sannasgala Hirimburegama) ஆகியோர் பெண் துணைவேந்தர் எனப் பெருமை பெற்ற முதல் மூவருமாவர்.

## பெண் சாதனையாளர் விருது (Woman of Achievement Award 2011)

சாதனை புரியும் இலங்கைப் பெண்களுக்காக Zonta Club 1 of Colombo ஆல் வழங்கப்படுகின்ற பெண் சாதனையாளர் விருது இவ்வாண்டில் 16 துறைகளுக்கு வழங்கப்பட்டது. கல்வி, மருத்துவம், விஞ்ஞானமும் தொழினுட்பமும், சட்டம், வங்கியியல், விளையாட்டு, கைத்தொழிற்றுறை, முகாமைத்துவம் என்றவாறு 16 துறைசார் சாதனை யாளர்கள் கடந்த 22.05.2011 அன்று கொழும்பு சினமன் ஆர்க் ஹொட்டலில் (Cinnamon Grand Hotel) இடம்பெற்ற விழாவின்போது கௌரவிக்கப்பட்டனர். இலங்கையில் விஞ்ஞானமும் தொழினுட்பமும் துறையில் சாதனை படைத்த பெண் என்ற இவ்வாண்டுக்கான விருது பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்திற்கு வழங்கப்பட்டது. இலங்கைச் சமூகத்துடன் தொடர்புடைய நீரிழிவு, போதைப்பொருள் பாவனை, போசணைக் குறைபாடுகள் போன்ற பிரச்சினைகள் தொடர்பில் வினையாற்றல் மிக்க ஆய்வுகளை மேற்கொண்டமைக்காக இவ்விருது வழங்கப்பட்டதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை ஒன்றின் மூலம் அறிய முடிந்தது. (The Sunday Times – 29.05.2011)

## கல்வியே பிரதான மூலதனம்

பொருத்தமான அறிவினையும் தேர்ச்சியையும் கொண்டுள்ள உற்பத்தியாண்மை மிக்க தொழிற்படையினை உருவாக்குவதில் கல்வி முறை முக்கியமான பங்கை ஆற்றுவதாக இலங்கை மத்திய வங்கியின் 2010 இற்கான ஆண்டறிக்கை உறுதி செய்கின்றது. இந்த

வகையில் அறிவுப் பொருளாதாரத்தை மூலதனமாகக் கொள்வதன் மூலம் எம் சமூகத்தவர் எழுச்சியடைய முடியும்.

உலக வங்கியால் தயாரிக்கப்பட்ட அறிவுப் பொருளாதரச் சுட்டெண் அடிப்படையில் இலங்கை 140 நாடுகளிடையே 82 ஆவது இடத்தில் இருக்கின்றது. அறிவுமூலதனம் என்ற நிலையில் கல்வி அமைந்திருப்பதால் பொதுக் கல்வி நிலையிலும் மூன்றாம் நிலைக் கல்வி நிலையிலும் நவீன மயப்படுத்தல்களும் புதிய போக்குகளும் பின்பற்றப்பட வேண்டியது அவசியமாகின்றது.

இலங்கையின் கல்வித்துறையை நோக்குமிடத்து பதிப்புக்கள், சஞ்சிகை வெளியீடுகள், ஆராய்ச்சிகள் தொடர்ந்தும் கீழ் மட்டத்திலேயே இருப்பதாக கல்வியாளர்கள் அடிக்கடி சுட்டிக்காட்டி வருகின்றனர். இந்நிலையில் புதிய துணைவேந்தர் என்ற நிலையின் எம்மவரின் அறிவுப் பொருளாதாரத்தையும் ஆய்வு வேட்கையையும் கட்டியெழுப்புவதற்கான வழிகாட்டல்களை மேற்கொள்ள வேண்டிய பாரிய பொறுப்பு வசந்தி அம்மையாருக்குரியதாகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஈழத் தமிழரின் தலைமைக் கல்வி நிறுவனமாகச் செயற்படுகின்றது. பல்கலைக்கழக அனுமதியைப் பெறும் மாணவர்களுக்கு மாத்திரம் கல்வியை வழங்குதல் என்பதற்கு அப்பால் சமூகம் பற்றிய பிரக்ஞையுடன் எமது பண்பாடு, விழுமியங்கள் மரபுசார் கலைவடிவங்கள் முதலிய அனைத்து அம்சங்களையும் பாதுகாக்கும் நிலையமாகச் செயற்படும் உரிமை பல்கலைக்கழகத்திற்கு உள்ளது.

பல்கலைக்கழகத்தால் சமூகத்திற்காகத் திறக்கப்பட்ட பாதையின் வடிவங்களாகப் பலவற்றை இனங்காட்டலாம். பல்கலைக்கழக உள்வாரி அனுமதிக்கான வாய்ப்பின்றிய நிலையினர் வெளிவாரிப் பட்டப் படிப்பைப் பெறுதல் இங்கு முக்கியமாகக் குறிப்பிட்டுக் காட்டத் தக்கது. இதே போல தமிழர் தத்துவமாகக் கொள்ளப்படத் தக்க சைவசித்தாந்தத்தை ஆராயும் மையம் நிறுவப்பட்டமையும் காலத்தின் தேவையறிந்த சமூகச் செயற்பாடாகும். இது தவிர எமக்குரிய அருங்கலைகளைப் பேணக் கூடிய வகையில் - மாணவர்கள் ஈடுபாடு கொள்ளக்கூடிய வகையில் பட்டக் கற்கைகள் ஏற்படுத்தப்படுவதும் காலத்தின் தேவையாக வுள்ளது.

முப்பது வருடங்களாக இடம்பெற்ற போர்ச் சூழல் ஓய்ந்துள்ள இத்தருணம் அபிவிருத்திக்கு மிகவும் சாதகமானதாகும். பொறியியல் பீடம் போன்ற முக்கிய பீடங்கள் இங்கு நிறுவப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமையும் மனமகிழ்விற்குரியவை.

இவற்றுடன் எம்மண்ணின் ஏற்றத்திற்கு வாய்ப்பளிக்கக் கூடிய சர்வதேச ஆய்வரங்குகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன் ஆரம்பக் கட்டமாகக் கடந்த ஆண்டில் ஓர் ஆய்வு மாநாடு இடம்பெற்றமையையும் இங்கு சுட்டிக்காட்டுதல் பொருத்தம்.

**தென்மராட்சியின் பெருமிதம்**

தமிழர் கல்வி வரலாற்றில் பாரம்பரிய, மரபு வழிக் கல்வியைப் பேணிய பெருமை தென்மராட்சிக்கு உண்டு. சைவம், தமிழ் என்ற உணர்வுகளின் ஒன்றித்த விளைநிலமாக இப்புனிதப் பூமி விளங்குகின்றது. இதனாலேயே ஈழநாட்டில் மாத்திரமல்லாது உலகளாவிய ரீதியிலும் புகழ் பெற்ற கல்வியாளர்களைத் தென்மராட்சி பிரசவித்துள்ளது. நாட்டில் ஏற்பட்ட அசாதரண சூழலும் அதன் விளைவால் இடம்பெற்ற மூளைசாலிகளின் வெளியேற்றமும் எம்மண்ணின் கல்வி எழுச்சியில் சில தடைக்கற்களை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில் வசந்தி அம்மையாரின் எழுச்சி ஒட்டு மொத்தமாக எம்மண்ணவரின் எழுச்சியாகவே நோக்கப்படுகின்றது. இதனாலேயே அம்மையாரைக் கௌரவித்து விழா எடுக்க வேண்டும் என்ற குரல் தென்மராட்சியின் நாலா திசைகளில் இருந்தும் ஏகோபித்து ஒலித்தது.

**நிறைவாக...**

*"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்*
*நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்*
*திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்*
*செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்"*

என்ற பாரதியின் வாக்கு வசந்தி அம்மையாரைப் போன்ற ஆளுமைகளைக் காணும்போதெல்லாம் உள்ளத்தில் உதயமாகிறது.

துணைவேந்தராகப் பதவியேற்ற நிலையில் ஊடகங்களுக்கு அவர் வழங்கிய செவ்வி இங்கு நினைவிற் கொள்ளத்தக்கது. யாழ்.பல்கலைக்கழகம் சர்வதேசத் தொழிற்சந்தையில் கேள்வி வாய்ப்புள்ள பட்டதாரிகளை உருவாக்க வேண்டும் என்றும் பல்கலைக்கழகத்துடன் தொடர்புடைய சமூகத்தினர் யாவரும் இதற்காக ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த வகையில் பல்கலைக்கழகத்தின் பண்புத்தர விருத்தியை நோக்கிய முக்கிய பயணத்தை அம்மையார் மேற்கொள்வார் என எதிர்பார்க்கலாம். எம்மண்ணின் மகளுக்கு அன்னை பூமியின் ஆசி என்றும் உண்டு.□

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

- பேராசிரியர் தி. வேல்நம்பி,
தலைவர், கணக்கியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**இலங்கை பல்கலைக்கழகத்தின் ஆரம்பம்**

19 ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலப்பகுதியில் பிரித்தானியக் குடியாட்சியில் இருந்த இலங்கையில் ஆரம்ப இடைநிலைப் பாடசாலைகள் சிறப்பான அபிவிருத்தியை அடைந்திருந்த போதிலும் பிரித்தானியா இந்தியாவைப் போன்று பல்கலைக்கழகங்கள் எதுவும் இருந்திருக்கவில்லை. இக்காலப்பகுதியில் இலங்கைத் தீவின் சிறந்த இடைநிலைப் பாடசாலையானது கொழும்பை முக்கியமாக கொண்டு அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. 1859 ஆம் ஆண்டின் முன்னர் அமைக்கப்பட்டிருந்த இராணியின் கல்லூரி ஆனது கல்கத்தாப் பல்கலைக் கழகத்தின் இணைந்த பல்கலைக்கல்லூரியாக இருந்தது. இது பின்னர் றோயல் கல்லூரி எனப் பெயரிடப்பட்டது. இது முதலில் மற்றிக்குலேசனுக்கு பின்னைய கல்வியை வழங்கியதுடன் இலண்டன் பல்கலைக்கழகத்துடன் தொடர்பு கொண்டு வெளிவாரிப் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தியது.

இடைக்காலப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறு எடுத்த மாணவர்கள் அவர்களது உயர் கல்விக்காகப் பிரித்தானியாப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பப்பட்டதுடன் வசதி குறைந்த மாணவர்கள் இந்தியப் பல்கலைக்கழகங்களுக்குச் சென்றனர். காலப்போக்கில் உயர்கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் சென்றது. இந்நிலையில் இலங்கை மக்களுக்குப் பல்கலைக்கழகம் தேவை என்பதையுணர்ந்து இலங்கையில் புகழ் பூத்த பெருமக்களான கலாநிதி ஆனந்தக்குமாரசாமி சேர் பொன் இராமநாதன் ஆகியோர் பல்கலைக்கழக இயக்கம் என இயக்கமொன்றையே ஆரம்பித்து போராடினார்கள். இவ்வாறு உயர் கல்விக்கான கோரிக்கை வலுப்பெற்றதன் காரணமாக 1870 இல் மருத்துவக் கல்லூரியும் 1874 ஆம் ஆண்டு சட்டக்கல்லூரிக்கான கல்வியும் 1893 ஆம் ஆண்டு தொழில்நுட்பக் கல்லூரி யொன்றும் தாபிக்கப்பட்டன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலப்பகுதியில் மாணவர்களின் சிறந்த கல்விக்காக இலங்கையில் பல்கலைக்கழகம் தாபிப்பதற்கென கூடுதலான அழுத்தம் கொடுத்ததுடன் இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டில் இப்புரட்சி பல்கலைக்கழக அமைப்பினால் அபிவிருத்தி செய்யப்பட்டது.

1942 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கைப் பல்கலைக்கழக விதியின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை பல்கலைக் கழகமானது சுயமாக இயங்கும் தனியான வதிவிட நிறுவனமாகக் கருதப்பட்டது. புதிய பல்கலைக்கழகத்தின் முக்கியப் பகுதியாகப் பல்கலைக்கழக கல்லூரியும் மருத்துவக் கல்லூரியும் விளங்கின. மேலும் பல்கலைக்கழகம் தொடர்பான நிறைவேற்று அதிகாரம் கவுன்சிலிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கல்வி சம்மந்தமான

விடயங்கள் பீடங்களினாலும் மூதவையாலும் நிர்வகிக்கப்பட்டன. பல்கலைக்கழகத்தின் தலைவராக வேந்தர் இருந்தார். அதேவேளை கல்வித்துறைக்கும் நிறைவேற்றுக் கடமைகளுக்கும் உபவேந்தர் தலைவராகவிருந்தார். இவ்வடிப்படையில் தற்போது இலங்கையில் திறந்த பல்கலைக்கழகம் உட்பட மொத்தம் பதினைந்து பல்கலைக்கழகங்கள் காணப்படுகின்றன.

| இலங்கையின் பல்கலைக்கழகங்கள் | ஆண்டு |
|---|---|
| கொழும்புப் பல்கலைக்கழகம் | 1967 |
| பேராதனைப் பல்கலைக்கழகம் | 1942 |
| சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் | 1959 |
| களனிப் பல்கலைக்கழகம் | 1959 |
| மொறட்டுவ பல்கலைக்கழகம் | 1972 |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 1974 |
| றுகுணுப் பல்கலைக்கழகம் | 1979 |
| கிழக்கு பல்கலைக்கழகம் | 1986 |
| தென் கிழக்கு பல்கலைக்கழகம் | 1995 |
| இராஜரட்டைப் பல்கலைக்கழகம் | 1995 |
| சப்பிரகமுவ பல்கலைக்கழகம் | 1995 |
| திறந்த பல்கலைக்கழகம் | 1980 |
| வயம்ப பல்கலைக்கழகம் | 1999 |
| ஊவா வெல்லஸ பல்கலைக்கழகம் | 2005 |
| கட்புல அரங்காற்றுக் கலைகள் பல்கலைக்கழகம் | 2005 |

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்**

இற்றைக்கு சுமார் எழுபது வருடங்களுக்கு முன்னர் நம் நாட்டின் பேரறிஞரும் ஞானியு மாகிய சுவாமி விபுலானந்தர் அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு ஒரு பல்கலைக் கழகம் வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்திருந்தார். இவ்வாறு வேண்டுகோள் விடுத்த சுவாமிகள் ஒரு பல்கலைக் கழகமானது சனப்பெருக்கம் கூடியதும் மாணவர் எண்ணிக்கை அதிகரித்ததும் பாரம்பரியக் கல்வி வளர்ச்சியடைந்ததுமான ஓர் இடத்தில் அமைய வேண்டும் என்றார். இத்தகையதொரு பிரதேசமே ஒரு சிறந்த பல்கலைக்கழகம் அமைவதற்கு சிறந்த இடம் எனக் குறிப்பிட்டார். இத்தகையதொரு பிரதேசம் யாழ்ப்பாணம் என்பதையும் அவர் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

காலஞ்சென்ற பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க அவர்கள் வித்தியோதய, வித்தியலங்கார பிரிவேனாக்களுக்குப் பல்கலைக்கழக அந்தஸ்துக் கொடுக்கவுதவிய போது அவற்றையொத்த நிறுவனமொன்றை வடக்கிலே அமைக்க வேண்டுமென்று கருதினார்

என்றும் அக்கருத்தினை அப்பிரதேசத்தின் அக்காலத் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்றும் நம்பகரமான முறையிலே அறியமுடிகிறது. அதற்குப் பின்னர் போராசிரியர் யோசேப் நீடம் போராசிரியர் ஜீ.சி சட்டர்ஜி ஆகியோரைக் கொண்ட நீடம் ஆணைக்குழுவானது யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் கூடிய விரைவில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் புதிய வளாகங்கள் அமைக்கப்பட வேண்டும் என்றும் பேராதனை கொழும்பு யாழ்ப்பாணம் ஆகிய மூன்று வளாகங்களிலும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் போதனைகள் நடாத்துவதற்கு வசதிகள் செய்யப்பட வேண்டும் என்றும் சிபார்சு செய்தது.

இதன் பிரகாரம் 1974 ஆம் ஆண்டு யூலை மாதத்துக்கு முன்னரே யாழ்ப்பாணத்தில் இலங்கைப் பல்கலைக்கழக வளாகமொன்றை அமைப்பதற்கான திட்டமொன்று அமைச்சரவை மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 1974 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆம் திகதி இலங்கைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகிய L.H. சுமணதாச கொழும்பில் அவருடைய அதிகாரிகளுடன் சேர்ந்து 1974 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வளாகம் ஒன்றைத் திறந்து வைப்பது தொடர்பாக அடிப்படைத் தீர்மானங்கள் பற்றிக் கலந்தாலோசித்தார்.

யாழ்ப்பாணக் கல்லூரி வளவிலமைந்துள்ள பட்டதாரி மாணவப் பிரிவையும் 1921 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களால் திருநெல்வேலியில் அமைக்கப்பட்டிருந்த பரமேஸ்வராக் கல்லூரியையும் இணைப்பதன் மூலம் 1974 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலாம் நாள் இலங்கை பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகம் நிறுவப்பட்டது. 1974 ஆம் ஆண்டு யூலை 19 இல் இலங்கை பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரான L. H. சுமணதாச வித்தியாலங்காரப் பல்கலைக்கழகத்தின் இந்துக் கற்கை தமிழ் ஆகிய துறைகளின் தலைவரான கலாநிதி கே. கைலாசபதி அவர்களை யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் முதல் தலைவராக நியமிக்கப்பட்டதை வெளிப்படுத்தினார். இவ்வாறு 1974 யூலை மாதம் 25 ஆம் நாள் வியாழக்கிழமை வெளியிடப்பட்ட 121/5 இலக்க அதிவிசேட வர்த்தக மானியில் வெளியாகிய பிரகடனத்தின் மூலம் 1974 ஒகஸ்ட் முதலாம் நாள் நிறுவப்பட்ட யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகமானது சட்டபீடம், உடற்கல்விப்பீடம் என்பவற்றை நிறுவுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் ஆரம்பத்தில் விஞ்ஞான பீடம், மனிதப் பண்பியற் பீடம் என்பவற்றுடன் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாண வளாகத்தின் முதல் போதனைசார் ஊழியர்களாக 1974 செப்டெம்பர் 01 ஆம் திகதியன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பணியாற்றிய சில ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இந்நிலைமைகளைத் தொடர்ந்து இலங்கையின் அப்போதைய பிரதம மந்திரியான சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்களால் 1974.10.06 அன்று பிறபகல் 2.25 மணியளவில் யாழ்ப்பாண வளாகம் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. அன்றைய தினம் யாழ்ப்பாண வளாகத்தின் முதல் 14 மாணவர்களுக்கான மாணவர் பதிவு புத்தகம் பிரதமர் அவர்களால் வழங்கப்பட்டது.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டம் பிரகடனப்படுத்தப் பட்டதன் விளைவாக உயர்கல்வி நிர்வாக அமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டு இலங்கை பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகம் 1979 ஜனவரி முதலாம் நாள் தன்னாதிக்கமுள்ள பல்கலைக்கழகமாகியது. புகழ்பெற்ற தமிழறிஞரான காலஞ்சென்ற பேராசிரியர் சு. வித்தியானந்தன் தன்னாதிக்கமுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக நியமிக்கப்பட்டார்.

## யாழ்ப்பாண பல்கலைக்கழக பீடங்களும் பட்டதாரி மாணவ திட்டங்களும்

யாழ்ப்பாண பல்கலைக்கழகமானது இன்று பின்வரும் பீடங்களை கொண்டு இயங்கி வருகின்றது. அவையாவன கலைப்பீடம், விஞ்ஞான பீடம், மருத்துவ பீடம், விவசாய பீடம், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம், உயர்பட்ட படிப்புகள் பீடம். மேலும் சித்த மருத்துவத் துறை துணைவேந்தரின் நேரடியான கண்காணிப்பின் கீழ் தனி அலகாகச் செயற்படுகின்றது.

மேலும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வளாகம் ஒன்று வவுனியாவில் இயங்குவதுடன் அங்கு இரண்டு பீடங்கள் செயற்படுகின்றன. அவையாவன, பிரயோக விஞ்ஞான பீடம், வணிகக் கற்கைகள் பீடம் என்பனவாம்.

மேற்குறிப்பிட்ட பல்வேறு துறைகளிலும் ஆண்டுதோறும் பலநூற்றுக் கணக்கான மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு அவர்களது கல்வியை தொடர்வதற்கு வாய்ப்பளிக்கப்படுகின்றது. இதன் பிரகாரம் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப காலப்பகுதியின் முதல் வருடங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் விபரங்களும் அண்மைக்காலத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் விபரங்களும் ஆராயப்படுவதன் மூலம் உயர் கல்வி விருத்தியில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டை மதிப்பீடு செய்துகொள்ள முடியும்.

| ஆண்டு | மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| 1974 | 114 |
| 1975 | 350 |
| 1980 | 1279 |
| 1995 | 615 |
| 1996 | 950 |
| 2010 | 4398 |

இவ்வாறு உள்வாரி வெளிவாரிப் பட்டப்படிப்புக்களில் பெருமளவு மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி வரும் இப் பல்கலைக்கழகமானது பட்டப்பின் படிப்புக்களையும் கொண்டு விளங்குகின்றமை குறிப்பிடதக்கதாகும். குறிப்பாக முதுகலைமாணி, முதுதத்துவமாணி, முது விஞ்ஞானமாணி, டிப்ளோமா, கலாநிதி முதலான பட்டங்களை வழங்கிவரும் இப் பல்கலைக் கழகத்தில் தொழில் புரிபவர்களின் செயற்பாடுகள் தொடர்பிலான சில கற்கைநெறிகளையும் காலத்துக்கு காலம் வழங்கி வருகிறார்கள்.

2010 ஆம் ஆண்டுக்குரிய தரவுகளின்படி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் (வவுனியா வளாகம் உட்பட) 67 துறைகளும், 4,398 மாணவர்களும், பட்டப்பின் படிப்பு நெறிகளில் 396 மாணவர்களும் உள்ளனர். 313 கல்வி சார் ஊழியர்களும், 504 கல்வி சாரா ஊழியர்களும் கடமையாற்றுகின்றனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்புகள் அலகின் மூலம் இதுவரை 2643 பேர் பட்டங்களைப் பெற்றுள்ளனர். கலை, வர்த்தகம் ஆகிய துறைகளில் இங்கு பட்டங்கள் வழங்கப்படுகின்றன.

வெளிவாரி தேர்வில் பட்டம்பெற்ற மாணவர்கள்

| கல்வியாண்டு | | பதிவுசெய்யப்பட்ட மாணவர் | | | பட்டம் பெற்றவர்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1990 | 1990/1991 | 554 | 795 | 1349 | - | - | - |
| 1991 | 1991/1992 | 215 | 450 | 665 | - | - | - |
| 1992 | 1992/1993 | 261 | 552 | 813 | - | - | - |
| 1993 | 1993/1994 | 339 | 703 | 1042 | - | - | - |
| 1994 | 1994/1995 | 222 | 500 | 722 | 72 | 106 | 178 |
| 1995 | 1995/1996 | 220 | 393 | 613 | - | - | - |
| 1996 | 1996/1997 | 239 | 505 | 744 | 51 | 68 | 119 |
| 1997 | 1997/1998 | 522 | 907 | 1429 | 59 | 98 | 157 |
| 1998 | 1998/1999 | 549 | 1068 | 1617 | 38 | 96 | 134 |
| 1999 | 1999/2000 | 469 | 879 | 1348 | 24 | 78 | 102 |
| 2000 | 2000/2001 | 441 | 777 | 1218 | 64 | 193 | 257 |
| 2001 | 2001/2002 | 498 | 859 | 1357 | 60 | 146 | 206 |
| 2002 | 2002/2003 | 355 | 571 | 926 | 76 | 246 | 322 |
| 2003 | 2003/2004 | 333 | 645 | 978 | 9 | 41 | 50 |
| 2004 | 2004/2005 | 376 | 754 | 1130 | 53 | 159 | 212 |
| 2005 | 2005/2006 | 354 | 654 | 1008 | 87 | 184 | 271 |
| 2006 | 2006/2007 | 145 | 333 | 478 | 1 | 11 | 12 |
| 2007 | 2007/2008 | 404 | 737 | 1141 | 91 | 166 | 257 |
| 2008 | 2008/2009 | 301 | 567 | 868 | 105 | 212 | 317 |
| 2009 | 2009/2010 | 310 | 632 | 942 | 24 | 25 | 49 |
| | | 7107 | 13281 | 20388 | 814 | 1829 | 2643 |

இதனை விட புறநிலைப் படிப்புக்கள் அலகு என்ற ஒன்று உருவாக்கப்பட்டு புறநிலைக் கற்கை நெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இத்துறையானது 1992 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. ஆங்கிலத்தில் Extra-Mutral Studies என்பதற்கு பல்கலைக் கழகத்துக்கு

புறத்தேயுள்ள படிப்புகள் அல்லது கற்கைநெறிகள் பல்கலைக்கழகமெனும் இறுக்கமான சுவர்களைத் தாண்டி வெளியே சென்று சமுதாயத்துக்கு கற்பித்தல், பல்கலைக் கழகத்தின் பட்டம் வழங்கும் பொதுவான கற்கைநெறிகளுக்கு உட்படாததும் சமூகத்தின் தேவைகளை ஒட்டியது மான மேலதிகப்படிப்புகள் என பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன.

இப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டமைப்பை நோக்கும் பொழுது துணைவேந்தர், பீடாதிபதிகள், துறைத்தலைவர்கள் ஆகியோருக்கிடையில் வரிசையதிகாரம் இருக்கின்ற அதே வேளை துறைத் தலைவர்கள் பீடாதிபதிக்கும் பீடாதிபதிகள் துணைவேந்தருக்கும் ஆலோசனை வழங்கும் இயல்பு காணப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள்

| பெயர் | காலப்பகுதி |
|---|---|
| பேராசிரியர் க. கைலாசபதி (தலைவர்) | ஒக். 1974 - ஜுலை 1977 |
| பேராசிரியர் சு. வித்தியானந்தன் (தலைவர்) | ஆக. 1977 - டிச. 1978 |
| பேராசிரியர் சு. வித்தியானந்தன் | ஜன. 1979 - ஜுன் 1988 |
| பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் (பதில்) | ஜுலை 1988 - ஆக. 1988 |
| பேராசிரியர் அ. துரைராஜா | செப். 1988 - மார். 1994 |
| பேராசிரியர் க. குணரட்ணம் | ஏப். 1994 - ஜன. 1996 |
| பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை | ஜன. 1996 - மார். 2003 |
| பேராசிரியர் எஸ். மோகனதாஸ் | மார். 2003 - மார். 2006 |
| பேராசிரியர் இ. குமாரவடிவேல் (பதில்) | ஜன. 2006 - டிச. 2007 |
| பேராசிரியர் நா. சண்முகலிங்கன் | டிச. 2007 - மார். 2011 |
| பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் | ஏப். 2011 - இன்றுவரை |

மேலும் நிர்வாக பீடத்தின் அதியுயர் அதிகாரியாக வேந்தரும் அவருக்கு அடுத்தபடியாக துணைவேந்தரும் காணப்படுகின்றனர். பல்கலைக் கழகத்தின் நிர்வாக வேலைகளை பொறுத்தவரை துணைவேந்தரே பெருமளவு முக்கியத்துவம் பெறுகின்றார். இந்தவகையில் துணைவேந்தரால் நியமிக்கப்படும் பல்கலைக்கழக நிர்வாக முறையானது பின்வரும் இரு வழிகளில் மேற்கொள்ளப்படுகின்றது.

1. கல்வி சார்ந்த நடவடிக்கைகளின் நிர்வாகம்
2. கல்வி சாராத நடவடிக்கைகளின் நிர்வாகம்

இவ்வாறு பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் இரண்டு வகையான நிர்வாக நடவடிக்கை களுக்கும் பொறுப்பாக விளங்கும் துணைவேந்தருக்கு அடுத்தபடியாக பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் பலர் நியமிக்கப்படுகின்றனர். இந்த வகையில் கல்வி சார்ந்த நடவடிக்கைகளை நிர்வகிக்கும் பொறுப்பு துணைவேந்தரிடம் காணப்பட்ட போதும் நிர்வாக முறையினை

இலகுபடுத்தும் பொருட்டு அதிகாரங்கள் பொறுப்புக்கள் கையளிக்கப்பட்ட முறையில் பீடாதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். பீடாதிபதிகளுக்கு அடுத்தபடியாக கல்விசார்ந்த நிர்வாகங்களை மேற்கொள்ளும் அதிகாரிகளாக துறைத் தலைவர்கள் காணப்படுகின்றனர்.

பல்கலைக்கழகத்தின் கல்வி சாராத நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக பதிவாளர் நியமிக்கப்பட்டுள்ளார். துணைவேந்தரைத் தலைமையாகக் கொண்ட தெரிவுக் குழு ஒன்றின் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் இவர் நியமிக்கப்படுகின்றார். இவர் துணைவேந்தருக்கடுத்தபடியாக கல்விசாராத நடவடிக்கைகளுக்கு நிர்வாக பொறுப்பாளராக செயற்படுகின்றார். இங்கு பல கல்வி சாராத நடவடிக்கைப் பகுதிகள் காணப்படுகின்றன. அவையாவன, திட்டமிடலும் மூலதன கிளையும் பராமரிப்பு பகுதி, தாபனக்கிளை, பரீட்சைக் கிளை, நிதிக்கிளை, நலசேவைகள் கிளை, கல்விக்கிளை, நிர்வாகக்கிளை, மருத்துவ நிலையம் என்பனவாகும்.

இவ்வாறான பல கட்டமைப்புக்களுடன் யாழப்பாண பல்கலைக்கழகமானது சமூகத்துடன் இணைந்த பல புத்திஜீவிகளை நாட்டுக்கு வழங்கி வருகின்றது. யாழப்பாண பல்கலைக் கழத்திலிருந்து பயின்று வெளியேறும் மாணவர்கள் பல தேசங்களில் பரந்துபட்டு அப்பிரதேசங்களின் அபிவிருத்திக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் தூண்களாக செயற்படுகிறார்கள் என்பது யதார்த்தமாகும். ☐

உசாத்துணை


1. Jeyawardane, R.P. (1980), Opening Address, Seminar Report, Social Science Research Centre, National Council of Sri Lanka.

2. Sirimavo Ratwatte Dial Bandaranayake. (1974), Ceremonial Inaguration of the Jaffna Campus, Jaffna.

3. Wijetunga W.M.K. (1983), Development of University Education in Sri Lanka, University Education and Graduate Employment in Sri Lanka, The Marge Institute, Colombo.

4. University Grants Commission. (1996 - 2009), Sri Lanka University Year Book, Colombo.

5. University of Jaffna (1978 / 79) First Annual Report, University of Jaffna.

6. அம்பிகைபாகன். ச. (1974) மேனாட்டு கீழ்நாட்டு அறிவுச் செல்வங்களை இணைத்த செமினறி, ஈழநாடு, ஈழநாடு பத்திரிகை வெளியீடு, யாழ்ப்பாணம்.

7. சுவாமி விபுலானந்தர். (1927), விவேகானந்தன், விவேகானந்த வெளியீட்டுச்சபை, இலங்கை.

8. நேசையா. கு. (1974), யாழ்ப்பாணத்தில் ஒரு பிரதேச பல்கலைக்கழகம், ஈழநாடு, ஈழநாடு பத்திரிகை வெளியீடு, யாழ்ப்பாணம்.

9. பொன்னம்பலம். வ. (1974), தமிழ் பிரதான மொழியாக வேண்டும், ஈழநாடு, ஈழநாடு பத்திரிகை வெளியீடு, யாழ்ப்பாணம்.

10. வேல்நம்பி. தி. (2002), இலங்கையில் பல்கலைக் கழகத்தின் தோற்றம்: யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் பற்றிய விசேட ஆய்வு, ஸ்ரீராம் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

# மன் உயிர்க்கெல்லாம் இனிது

- கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

மனித வாழ்க்கையில் மகிழ்வான நிலைகள் பல உள்ளன. உலகத்திலே உள்ள உயிர்களுக்கெல்லாம் இன்பந்தரும் நிலையை வள்ளுவப் பெருந்தகை எடுத்துக்காட்டியுள்ளார். பண்டைய தமிழ் இலக்கியமான புறநானூறு பிள்ளைப்பேறு பெற்றவரைச் சிறப்பான வாழ்வு பெற்றவர் எனக் குறிப்பிட்டுள்ளது. எல்லாச் செல்வங்களிலும் பிள்ளைச் செல்வமே உயர்ந்ததெனப் பாடியுள்ளது. ஆனால் திருக்குறள் மேலும் சிறப்புற பிள்ளைப்பேற்றை விளக்கியுள்ளது.

புதல்வரைப் பெறுதல் என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் பிள்ளைச் செல்வம் பற்றிய தமது கருத்துக்களை ஒழுங்குபடத் தொகுத்து வைத்துள்ளார். ஒருவன் பெறும்பேறுகளில் நன்மக்களைப் பெறுவதே சிறப்பான பேறு என முதலில் இயம்பியுள்ளார். அடுத்துப் பண்புடைய மக்களைப் பெற்றவரை ஏழு பிறவியிலும் துன்பங்கள் அணுகமாட்டா என விளக்கியுள்ளார். மனித வாழ்வில் இப்பிறவியில் மட்டுமல்ல எல்லாப்பிறவியிலும் இன்பம் தரும் மக்கட்பேறு பற்றி வள்ளுவர் கூறும் கருத்துக்கள் தெளிவாக அறியவேண்டியவை.

பிள்ளைப்பேறு பெற்றோருக்குச் சிறப்பான பொருள் தேட்டம் போன்றது. புதல்வர் செயற்பாடுகள் பெற்றோரைச் சிறப்பான நிலைக்கு உயர்த்தும்போது இக்கருத்து துலக்கம் பெறுகிறது. நல்ல பிள்ளைகளைப் பெற்றோர் மறுமையிலும் இன்பம் பெறுவர். பிள்ளைப் பருவத்திலே பெற்றோர் பெறும் இன்பத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார். மக்களின் முழு உடலுக்கும் புதல்வரைத் தீண்டும்போது இன்பம் கிடைக்கிறது. மழலைச் சொற்களின் இனிமை குழலோசையாலும் யாழோசையாலும் அடையும் இனிமையைவிடச் சிறந்தது என எடுத்துக்காட்டியுள்ளார்.

தந்தையும் தாயும் தம்முடைய புதல்வருக்குச் செய்ய வேண்டிய கடமையை வள்ளுவர் வகுத்துக் காட்டியுள்ளார்.

**தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல்.**

தனக்குப் பல்வேறு இன்பங்களைத் தந்த மகனுக்குத்

தந்தை நன்றியாகச் செய்யவேண்டிய ஒரு கடமை உண்டு. அதுவே அந்த மகனைக் கற்றார் அவையிலே சிறப்பான கல்வியாளனாக முதன்மை பெற்று இருக்குமாறு செய்தலாகும். **(பொருட்செல்வம் உடையவனாக ஆக்குவதைவிடக் கல்விச் செல்வம் பெற்றவனாக ஆக்கிவிட வேண்டும். அதனால் எல்லோரும் இன்பமடைய முடியும்.)**

தன்னுடைய பிள்ளையைச் சான்றோன் என எல்லோரும் கூறும்போது தாய் பெரிதும் மகிழ்வடைகிறாள். அந்தப்பிள்ளையைப் பெற்றெடுத்தபோது அடைந்த மகிழ்ச்சியைவிடப் பெரிதும் உவக்கின்றாள். உவகை என்பது உள்ளத்துள் உள்ளும் போதெல்லாம் அடையும் இன்ப உணர்வு ஆகும். சான்றோன் என்ற சொல் வள்ளுவர் காலத்தில் கல்வியறிவு பெற்றவரையே குறித்தது. குழந்தைப் பருவத்திலே மழலைச்சொல் கேட்டபோது அடைந்த இன்பம் வேறுபட்டது. சொல்லைக் கேட்கும்போதுதான் அந்த இன்பத்தைச் செவியால் உணர முடிந்தது. ஆனால் சான்றோன் எனப் பிறர் பாராட்டிப் பேசும்போது அதனை நினைந்து மகிழ்ச்சியடையும் நிலை ஏற்பட்டது. ஒரு தாயின் உணர்வு நிலையில் வள்ளுவர் கூறும் கருத்து தனித்துவமானது. பிள்ளை நல்லவனாக வல்லவனாக இருந்தால் எல்லோரும் தந்தையைத்தான் பாராட்டுவர். ஆனால் அந்தப்பிள்ளையைப் பெற்ற தாயோ உள்ளத்தால் உவகையடைவாள்.

**மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை**
**என்நோற்றான் கொல் எனும் சொல்.**

என வள்ளுவர் உலகியலைச் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார். மகன் தன்னுடைய தந்தைக்குச் செய்யவேண்டிய உதவி ஒன்றுண்டு. தந்தை தனக்களித்த கல்வியறிவைப் பயன்படுத்திப் பிறரை வாழ வைக்கும் பெருந்தகையாக மகன் உலகிலே வாழ்வு நடத்த வேண்டும். எல்லோரும் அந்த மகனைப் பெறுவதற்கு இவனுடைய தந்தை எத்தகைய பெரிய தவத்தைச் செய்தானோ என வியக்க வேண்டும். தவமிருந்து பெறும் பிள்ளையின் சிறப்பையும் இக்குறளிலே வள்ளுவர் கூறியுள்ளார்.

தாய் நினைந்து மகிழவும் தந்தை எல்லோராலும் பாராட்டப்படவும் மகன் சிறப்பாகத் தன் கடமைகளைச் செய்ய வேண்டும். பிள்ளைப் பேற்றின் முழுமையான பலன் இதுவே. இத்தகைய அறிவுடைய பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர் மிகவும் மகிழ்வர் என வள்ளுவர் ஒரு குறளிலே பாடியுள்ளார்.

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன் உயிர்க்கு எல்லாம் இனிது.

அறிவுடைய பிள்ளைகளால் உலகிலுள்ள எல்லோர்க்கும் நன்மை கிடைக்கும் வள்ளுவர் மேற்காட்டிய குறளிலே 'மாநிலத்து மன்னுயிர்க்கு' என்னும் தொடரைப் பயன்படுத்தியிருப்பது கவனத்திற்குரியது. பெற்றோருக்கு மட்டுமன்றி நிலவுலகம் முழுவதும் நிலைபெற்றிருக்கும் உயிர்களுக்கெல்லாம் இனிமையான அறிவுடைமையைப் பெற்றிருப்பவர் பெருஞ்சிறப்புக்குரியவர். இங்கு 'மக்கள்' என்ற சொல்லின் மூலம் ஆண், பெண் என்னும் இரு பாலாரையும் வள்ளுவர் நயமாகச் சுட்டிப் போந்துள்ளார்.

அறிவுடைமையால் ஒருவர் செய்யும் பணி உலகத்து மக்களுக்குப் பயன் தருவதாக இருக்க வேண்டும் என்பதே வள்ளுவருடைய நோக்கமாகும். 'அறிவுடமை' எனும் அதிகாரத்தில் இக்கருத்தை அவர் மேலும் விளக்கமாகக் கூறியுள்ளார். அறிவினால் எல்லாவற்றையும் பெறலாம். அறிவு ஒருவருக்கு அரிய தலைமைத்துவத்தையும் ஆளுகைச் சிறப்பையும் நல்கும். ஒரு நிறுவனத்தை நிர்வகிக்கும் திறன் அறிவின் துணையால் சிறப்பாய் அமையும்.

எனவே பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு வழங்கும் கல்வியறிவு அவர்களுக்கு மட்டும் சிறப்பைத்தருவதாக அமையாது உலகு தழுவியதாக அமையவேண்டும். இன்று கல்வியினால் பெறும் தலைமைத்துவப் பொறுப்பு இதனைச் செவ்வனே நிறைவேற்ற வேண்டும். அறிவு ஒருவரைக் காக்கும் கருவியாகவும் அரணாகவும் அமையும் தன்மை கொண்டது. அதனைப் புகட்டும் பணியென்பது ஓர் உயர்ந்த பணியாகும். அப்பணியைச் செய்யும் பொறுப்பை ஏற்ற நிறுவனத்தை நிர்வகிக்கும் தலைமைத்துவம் மிகவும் உயர்வானது. அப்பணியை ஏற்றவர் அறிவுடமையால் பெற்றோரையும் உலகிலுள்ளோரையும் மனம் மகிழச் செய்யும் பொறுப்பை ஏற்றவராவார்.

இன்று கல்வி நிறுவனங்களில் உயர்ந்த நிறுவனமாக விளங்கும் பல்கலைக்கழகம் இத்தகைய அறிவுடைமையால் உலகத்தையே மகிழ்விக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. அதன் நிர்வாகத் தலைமைப் பொறுப்பை ஏற்ற உபவேந்தர் அப்பணியைச் சிறப்பாக நிறைவேற்றக் கடமைப்பட்டவர். பெண்ணின் அறிவுடைமையும் ஆளுமைத் திறனும் உலகால் அறியப்பட ஒரு வாய்ப்புக்கிடைத்துள்ளது. அதனை நிறைவேற்றும் உபவேந்தர் காலத்தினால் நியமிக்கப்பட்டவர். வள்ளுவர் கருத்தை எல்லோரும் அறியப் பணிசெய்ய வந்தவர் அவரை வாழ்த்துவோம். □

## துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் அவர்கள் வழங்கிய செவ்விகள்

**தினகரன் நாளிதழுக்காக. . .**

**சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இலங்கையின் மிகவும் வயதில் குறைந்த உபவேந்தரும் யாழ். பல்கலையின் முதற்பெண் உபவேந்தருமான வசந்தி அரசரட்ணம் தினகரன் வாரமஞ்சரி நேயர்களுக்காக மனம் திறக்கிறார்.**

**நேர்காணல்: வ. சிவஜோதி**

**பெண் என்ற ரீதியில் துணைவேந்தராக நீங்கள் பதவியேற்றபோது ஏதாவது சவால்களை எதிர்கொண்டீர்களா?**

என்னைப் பொறுத்தவரையில் பெண் என்ற ரீதியாக நான் அவ்வாறு நினைக்கவில்லை. நான் செய்யும் செயல்களையும் BOLD ஆகவே செய்து வருகிறேன். மற்றவர்கள் என்ன சொல்வார்கள் என்ன நினைப்பார்கள் என்பது பற்றி நான் கவலைப்படுவதில்லை. அதற்காக நான் பிழையான வழியில் செல்கிறேன் என்று கருதக்கூடாது. பெண் என்ற அடிப்படையில் இதுவரையும் எனக்கு தொழிலில் எந்தப் பின்னடைவும் வந்ததில்லை.

**யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை பொறுத்தவரையில் ஒவ்வொரு பதவிகளுக்கும் பல்வேறு பின்புலங்கள் (ஊர், குடும்பம்) அவசியமென சொல்லி வரப்பட்டிருக்கிறது. இதனால் உங்களுக்கு ஏதாவது தாக்கம் ஏற்பட்டிருக்கிறதா?**

உண்மையை சொல்லப் போனால் நான் இருந்து வந்த பீடத்தில் (Medical Faculty) அவ்வாறான பிரச்சினைகளுக்கு நான் முகம் கொடுக்கவும் இல்லை. எனக்கு அவ்வாறான பிரச்சினை வரவும் இல்லை.

எங்களுடைய சமுதாயத்தில் ஒரு சிறு பிரச்சினை என்று வந்தவுடன் அதை ஊதிப் பெருப்பிக்கும் மனப்பாங்கு இருக்கிறது. மேற்கத்தேய நாடுகளுடன் ஒப்பிடும்போது கீழைத்தேய நாடுகளில் இவ்வாறான பிரச்சினைகள் அதிகமாக காணப்படுகின்றன. இது எமது கலாசாரம் மாறி விட்டது. உதாரணத்திற்கு கறுப்பாக சத்தி எடுத்தான் என்று சொல்வதை காகமாக சத்தி எடுத்தான் என்று சொல்லி முடிப்பார்கள். சின்ன சின்ன விடயங்களை பெரிதாக்கி எங்களுக்கு நாங்களே சேறு பூசிக்கொண்டு இருப்பதுதான் எமது வழக்கமாக இருந்து வருகிறது. அதைத்தான் எனது கருத்தாகவும் நான் சொல்வேன்.

**யாழ். சமூகம் கல்விச் சமூகமென நீண்டகாலமாக கூறப்பட்டு வந்திருக்கிறது. ஆனால், கடந்துபோன பல பிரச்சினைகளால் அது கல்வியில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது பின்னடைவை எதிர்நோக்கியுள்ளதாகவும், ஒரு தேக்க நிலை உருவாகியுள்ளதாக கூறப்படுகிறதே?**

என்னைப் பொறுத்தவரையில் முன்பு நடந்து வந்து கொண்டிருந்த மரபு ரீதியான கல்விச் செயற்பாடு தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அதில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை ஆனால், உலகில் ஏற்பட்டிருக்கும் (Reforms) மாற்றத்தில்தான் நாம் கூடியளவு கவனம் செலுத்த முடியாதுள்ளது. கடந்துபோன பிரச்சினைகளால் அவற்றுக்கு ஏற்றவாறு எம்மை மாற்றிக்கொள்ள முடியாது போயுள்ளது. அடுத்து, எமது மாணவர்களின் கல்வித் தரம் குறைந்து போனதாக நான் சொல்லமாட்டேன். மாறாக அவர்களின் Skilis தான் குறைந்துள்ளது. இதுவரை காலமும்

வெளிஉலகத்துடனான தொடர்பு (Interaction) குறைவாக உள்ளது. அவர்களது வீட்டில் இணையத் தள வசதிகள் இல்லாமல் இருப்பது: உதாரணமாக எனது வீட்டிற்குக்கூட இணைத்தள வசதியை ஏற்படுத்த முடியாமல் இருக்கிறது. நகரத்தில் இருந்து சிறிது தொலைவாக செல்லும்போது நவீன வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. இதனாலேயே எமது மாணவர்களுக்கு உலக விடயங்களை அறிந்து கொள்ளவோ, அவற்றில் இருந்து தம்மை Update செய்துகொள்ளவோ முடியாது இருந்தது. அதனாலேயே மாணவர்களுக்கு ஒரு நேர்முகப் பரீட்சையை எதிர்கொள்ளவோ, ஆங்கிலம் பேசுவதோ கடினமாக இருந்து வந்தது. இதுவரை காலமும் அவர்கள் ஒரு சிறிய வட்டத்திற்குள்ளேயே வாழ்ந்து வந்துவிட்டார்கள். அவர்களுக்கு வெளிஉலக அனுபவத்தையும் அறிவையும் பெற்றுக்கொடுப்பது சிறிது கடினமாக இருக்கிறது. அடிப்படை பொது மக்களுடனான தொடர்பு பெரிதாக மாற்றம் வராவிட்டாலும் இவ்வாறான வெளி உலகத்துடனான exposure தான் முக்கியமென நான் கருதுகின்றேன்.

**மேற்படி பிரச்சினைகளுக்கு நீங்கள் என்ன முன்னெடுப்புக்களை மேற்கொள்கிறீர்கள்?**

ஒவ்வொரு பீடத்தில் உள்ள மாணவர்களின் தரமும் ஒவ்வொரு வகையாக இருக்கும். விவசாயம், மருத்துவம், விஞ்ஞானம், கலை என்று பல்வேறு பீடங்கள் உள்ளன. ஒவ்வொரு வரினதும் பிர்சசினைகளை ஒரே மாதிரியாக அணுகமுடியாது. ஒவ்வொருவரினதும் பிரச்சினை களையும் தனித்தனியாக அணுகியே தீர்வு காணப்பட வேண்டும். எடுத்தவுடனேயே மருந்துச்சீட்டில் உள்ளது போல காய்ச்சலுக்கு இந்த மருந்து என மருந்து கொடுப்பதுபோல பொதுவாக கொடுக்க முடியாது. நிலைமைகளை ஆராய்ந்து அதற்கேற்பவே அவர்களுக்கு உரிய முறைகளை நாம் கையாள முடியும். ஒவ்வொரு பீடத்திலும் தனித்தனியாக ஒவ்வொரு மாணவர்களையும் வித்தியாசமாக அணுகி அவர்களை முன்னேற்ற வேண்டிய தேவை இருக்கிறது.

**உங்கள் பல்கலைக்கழகத்தில் ஏதாவது வளப்பற்றாக்குறை இருக்கிறதா?**

வளப்பற்றாக்குறை என்று கூறும்போது எவ்வாறு மாணவர்களுக்கு Exposure இல்லாமல் இருக்கிறது என்று கூறினேனோ அதுபோலவே எமது ஊழியர்களும் காணப்படுகிறார்கள். பிள்ளைகளின் கல்வித் தரத்தை முன்னேற்ற வேண்டுமென்றால் விரிவுரையாளர்களுக்கும் அவ்வாறான Exposure தேவை. முன்பு ஒரு பயிற்சிப் பட்டறைக்கோ அல்லது கருத்தரங்கிற்கோ போகக்கூடிய சந்தர்ப்பங்கள் இருக்கவில்லை. அவ்வாறான செயற்பாடுகளுக்கு அறிவித்தல் வந்தாலும் உரிய நேரத்தில் எமது கையில் கிடைப்பதில்லை. நாங்கள் செய்ய வேண்டியது இவ்வாறான அறிவித்தல்கள் வரும்போது நாங்கள் அதற்குத் தயாராகி அதற்குப் பொருத்தமான விரிவுரையாளரை அனுப்பி அவர்களை பயிற்றுவிப்பதால் அவர்கள் எமது மாணவர்களுக்கு அவற்றை பயிற்றுவிப்பார்கள்.

**யாழ்ப்பாண சமூகத்தில் மாணவர்கள் கல்வியைப் போலவே பண்பாட்டிலும் முன்னிடத்தில் இருந்து வந்துள்ளார்கள். ஆனால் தற்போது அது பெரும் அச்சுறுத்தலாகவும் பிரச்சினைக் குரியதாகவும் மாறியுள்ளது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

மாணவர்கள் என்று நோக்கும்போது ஊடகங்கள் தான் அவர்களின் குண இயல்புகளை மாற்றுவதற்கு காரணமாக அமைகின்றன. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊழியர்கள்,

மாணவர்களுடன் நல்லுறவை பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மாணவர்களை சரியான விதத்தில் அணுகுவோமானால் அவர்களை இலகுவில் மாற்றக்கூடியதாக இருக்கும். ஏனெனில் அவர்கள் எங்களுடைய பிள்ளைகள். சில மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு வந்தவுடன் தாம் ஒரு வித்தியாசமான மட்டத்தில் உள்ளவர்கள் என்ற நினைப்பு வருகிறது. ஆனால் அவர்களுக்கு ஒன்றை ஞாபகப்படுத்த வேண்டும். நீங்களும் சமூகத்தின் ஒரு அங்கமென்பதை. அந்த எண்ணத்தை மாணவர்கள் மத்தியில் நாம் உருவாக்குவதும் ஊழியர்களின் மாணவர்களுடனான நட்புறவும் தான் அவர்களை மாற்றும். சில பீடங்களின் கவுன்சிலர் இல்லாமல் மாணவர்களே நேரடியாக விரிவுரையாளர்களை கண்டு தமது பிரச்சினைகளை முறையிடுகிறார்கள். அவ்வாறான மாணவர்களுக்கும் விரிவுரையாளர் களுக்குமான நட்புறவே இந்த பிரச்சினைக்கு தீர்வாக அமையும்.

**உங்கள் வெற்றி பின்னால் இருப்பவர்கள் யார்? நீங்கள் யாரை இந்த சந்தர்ப்பத்தில் நினைவுகூர விரும்புகிறீர்கள்?**

என்னுடைய வெற்றிக்கு பின்னால் இருப்பவர் என்றால் நிச்சயமாக எனது அம்மா தான். எனது தாய் தான் எனது அடித்தளத்தை இட்டார்கள். அவர்தான் என்னை ஊக்குவித்தார். அடுத்தாக எனது இரு மாமன்மார், அதாவது எனது அம்மாவின் இரு சகோதரர்கள். அதேபோல அம்மாவின் மாமா. அதற்கு பின்பு பட்டப்பின் படிப்பிற்கு நான் வந்த போது பேராசிரியர் பாலசுப்பிரமணியம் Bio - Science பேராசிரியர் எனது ஆளுமையை வளர்ந்தவர். அவர் கொழும்பிலும் இங்கும் பேராசிரியராக விளங்கியவர். எனது ஆளுமையை ஊக்குவித்து என்னை முன்னுக்கு கொண்டுவந்தவர். நான் எதற்கும் துணிந்து பேசவோ, செய்யவோ என்னை ஊக்குவித்தவர்.

**வேறு ஏதாவது கூற விரும்புகிறீர்களா?**

நான் தற்போது பேட்டி கொடுத்து நான் இதை செய்வேன் என்று கூறுவதை விட ஒரு வருடத்தின்பின் என்னை பேட்டி கண்டால் நான் இத்தனையும் சாதித்திருக்கிறேன் என்று கூறுவதைத்தான் விரும்புகிறேன். தற்போது என்னை பேட்டி காண்பது முக்கியமல்ல. நான் இவ்வளவு செய்வேன் என்று கூறிவிட்டு ஒரு வருடத்தின்பின் ஒன்றுமே செய்யாது போயிருக்கலாம். எல்லோரும் நாங்கள் அது செய்வோம் இது செய்வோம் என்று கூறுவார்கள் பின்னர் கேட்டால் ஒன்றுமே இருக்காது. ஒரு வருடத்தின் பின்னர் இவரை பேட்டி கண்டோம் இவர் சாதித்துள்ளார் என்று கூறுவதையே நான் விரும்புகின்றேன். நான் என்ன செய்தேன் என்பது தான் முக்கியமே தவிர என்ன செய்வேன் என்பதல்ல.

தினகரன் வாரமஞ்சரி 24-04-2011

# Jaffna University gets first woman VC

**Sunday Observer . . .**

Professor Vasanthi Arasaratnam assumed duties as the eighth Vice Chancellor of the University of Jaffna. She also becomes the first woman Vice Chancellor of the Jaffna University.

VC Vasanthi Arasaratnam also served as the first woman Dean of the Medical Faculty of Jaffna.

Excerpts of her interview:

**Q.** You are the first woman Vice Chancellor of the University of Jaffna. What have you to say about your new designation?

**A.** I am happy to be the first woman Vice Chancellor of the University of Jaffna and I consider it an honour for the women of Jaffna who always show a keen interest in either educating themselves or remaining a power in educating their children.Unlike in the past,the literacy rate of women in the Jaffna peninsula is very high.For instance the Mayoress of Jaffna Yogeswari Patkunaraja and the Government Agent of Jaffna Imelda Sukumar are women.

I also held the position as the first woman Dean of the Medical Faculty of Jaffna from 2000 to 2003.

Even at the University of Jaffna female students entering various faculties are on the rise.Apart from the academic side,the women from Jaffna are also holding very responsible designations in various Government and private sector institutions.

So in this backdrop I am happy to assume my duties as the first woman Vice Chancellor of the University of Jaffna, the institution which was open in 1974 by another prestigious woman the late Premier Sirimavo Bandaranaike who had the rare privilege of being the first woman Prime Minister in the world.

**Q:** When Jaffna experienced a turbulent period, you were one of the academics who was determined to remain in Jaffna to ensure the smooth functioning of the University. How do you describe the dark period you had to face?

**A:** It was a difficult time.The peninsula was in the doldrums.All essential institutions which had offered goods and services to the northerners had been badly hampered.University of Jaffna was also one of them.The Medical and Science Faculties hardly had resources.However I take this opportunity to appreciate the determination and commitment of the academic staff as well as the students of the University in ensuring the uninterrupted functioning of this hallowed institution.

During my tenure as Dean of the Jaffna Medical Faculty, power failures,shortages in laboratory items and teaching hospital facilities were depleted and these remained as major obstacles preventing the smooth functioning of the University.

To obtain electricity we had to depend on generators and most of the time due to the short supply of fuel, functions of certain areas of the faculty had to be slowed down.We had to send our students out of Jaffna for hospital studies.

In the meantime,I remember with great respect and gratitude the services rendered by the late Forensic expert Professor. Chandrasiri Niriella to the Medical Faculty of Jaffna during the peak of the turbulent days in the North. He visited the Jaffna Medical Faculty and helped the Faculty in a big way. He lectured to the students and also functioned as examiner. Several other academics also came from the South to Jaffna at that time and offered their services without any hesitation to our students.

However, despite all the difficulties our students did their part efficiently and several of them are currently doing extremely well as medical practitioners in various parts of the country.

**Q:** You were the Dean of the Medical Faculty of Jaffna from 2000 to 2003, what is the present state of the Faculty?

**A:** Since the civil strife came to an end in 2009, there is a considerable improvement in the functions of the faculty. We are able to obtain the requirements what we need. The intake of students has also improved. The Jaffna Medical Faculty has even Sinhala students as well as students from various parts of the country.

At present the Faculty is on an upward move with academic staff from outside Jaffna and abroad showing their interest in cooperating with the faculty. Though the Medical Faculty remained stable with limited resources during the turbulent period, now we have to catch up with other Medical faculties in the country in improving our academic activities.

Laboratory facilities, computer arrangements and the library requirements have to be significantly improved.

**Q:** Following the disturbances in the North, several academics who served in the Jaffna University left the peninsula seeking greener pastures abroad. What's your view on this brain drain?

**A:** It was a pity to lose the services of prominent academics in the University of Jaffna. When the University of Jaffna first started as a campus in 1974, several academics serving in other universities in the country came to Jaffna and did their part with greater enthusiasm. But later on many of them could not face the gravity of the situation and they opted to leave peninsula as well as the country. However, some of them continued to support the university from abroad by providing it with computers, books, financial assistance etc.

At present we even have the products of the University of Jaffna in the academic staff. We should ensure their smooth services by supporting them in every aspect of their career. For instance some of the senior medical practitioners at the Jaffna Teaching Hospital are the products of the Jaffna Medical Faculty. Therefore we have to build up a new trend in utilising the maximum of existing intellectuals and bringing out the best out of them.

**Q:** What are your priorities as the new Vice Chancellor of the Jaffna University?

**A:** First of all I would like to concentrate more towards improving infrastructure facilities of the university. The infrastructure of the Jaffna university has been neglected due to the turbulent conditions in the past three decades. Now with the favourable atmosphere we have to explore ways and means of stabilising infrastructure facilities of the university.

Measures will also be taken to provide more facilities for the academic staff. The University of Jaffna now has several faculties. Therefore the shortcomings in those faculties should also be addressed.

During the turbulent times, the laboratories of various faculties had suffered immensely with the loss of equipment and material. Plans are being worked out to put up new buildings to meet future demands. We expect more funding for this purpose.

**Q:** Plans have been initiated to create a new Engineering Faculty for the University of Jaffna. What's your view about this?

**A:** Plans to create an Engineering Faculty for the University of Jaffna were first initiated when the renowned late Engineering Professor T. Thurairaja was the Vice Chancellor of the University of Jaffna in the mid nineties. Later Prof. V. Navaratnaraja from Malaysia was keen on making the

Engineering faculty a reality. However, the plan had to be shelved due to unfavourable conditions that prevailed in the North.

But now a five member committee has been set up to look into it. The committee comprises Professors Ratnajeevan Hoole, Kumar Vadivel and K. Kandaswamy. The committee is working on a comprehensive proposal on the Jaffna Engineering Faculty.

**Q:** How do you expect the Tamil expatriate community to make their contribution towards the University of Jaffna?

**A:** Well the expatriate community could do a tremendous job in enhancing the academic activities of the Jaffna University. Earlier the situation was different. Tamil expatriates found it difficult to interact closely with Jaffna. I have plans to strengthen the alumni of the Jaffna University. Therefore those who have passed out from the University of Jaffna could correspond with the alumni and do whatever they could for the University.

There is a considerable portion of Tamil expatriates who have graduated from the University of Jaffna. Several of them are doing extremely well in their chosen careers. So they could come out in a big way in the development of the Jaffna University.

**Q:** Being an academic what is your view on the state of the education in present day Jaffna?

**A:** I would say the deaths and destruction have in no way hampered education in Jaffna. Despite the adverse conditions, education at school level or at University level remained stable.There would have been shortcomings in infrastructure facilities,but there was no drop in the enthusiasm of education. With the limited resources available during the turbulent days, students from Jaffna came out with good results in their examinations at national level.

But the drawback now is the teaching of English. There was a time the Jaffna peninsula had scholars in English.But the dark period in Jaffna had cut off the interaction of the Jaffna people with the outside world, creating a lull in English education.More concentration should be paid towards reviving the standard of English education in Jaffna at grass-roots level. I believe the expatriate community could assist in a considerable manner with regard to the revival of English education.

**Q:** You served at the University of Jaffna from 1984. You would have come across very difficult conditions in the peninsula. Since the difficult days came to an end in 2009, what's your observation on post-conflict development activities?

**A:** Well it looks encouraging. More healthy interaction in various fields could be seen between the North and South. What I would insist is there should not be delays in addressing the immediate problems of the people affected by the conflict. The people who have engaged in the peace building process should look beyond petty differences.

The Jaffna Peninsula has suffered immensely due to the conflict in the past three decades. Therefore future plans in rebuilding the North and developing its resources should be carried out in a well coordinated manner.

***By: Anath Palakidnar***

(Sunday Observer - 10 April 2011)

திருக்கணித பதிப்பகம் – சாவகச்சேரி 021 227 0257